# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**டிசம்பர் 2000 ஜீவியம் 6 மலர் 8**

## இம்மாத மலரில்..........


| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| யோக வாழ்க்கை விளக்கம் IV | 2 |
| இம்மாதச் செய்தி | 15 |
| லைப் டிவைன் | 16 |
| அன்பர் கடிதம் | 28 |
| சிறு குறிப்புகள் | 29 |
| சாவித்திரி | 31 |
| கன்சல்டன்சி | 33 |
| அன்பர் அனுபவம் | 35 |
| லைப் டிவைன் - கருத்து | 38 |
| பகவானுடைய இதர நூல்கள் | 40 |
| அஜெண்டா | 42 |
| குறுகிய கண்ணோட்டம் - நம் சுயநலத்தை வலியுறுத்துகிறது - அன்னையை விலக்குகிறது | |
| பரந்த கண்ணோட்டம் - நம் பர்சனாலிட்டியை விரிவடையச் செய்கிறது - அன்னையை நெருங்க வைக்கிறது | 49 |
| பிரார்த்தனை பலிக்க வேண்டும் ரௌடியின் மனம் | 55 |


* * *

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**

**வருட சந்தா ரூ.60/-**

# யோக வாழ்க்கை விளக்கம் IV

கர்மயோகி

**614) மனத்தைப் பிடித்து உலுக்கும் எண்ணத்தை (pre occu-pation) விடாமல், ஒருநிலைப்படுதல், சமர்ப்பணம், சரணாகதி, ஆர்வம் ஆகியவை நிரந்தரமாக நிற்கா. நாமே உவந்து அவற்றை விடுவது கடினம். உயர்ந்த எண்ணத்தை ஏற்று, அங்கு மனம் நிலைத்தால், உலுக்கும் பேயின் ஆட்டம் குறையும்.**

எழுத்தாளர்கள் எழுதும் உற்சாகத்திற்காகக் காத்திருப்பார்கள். அனுபவசாலிகள் எழுத ஆரம்பித்தால் உற்சாகம் வரும் என்பார்கள். உற்சாகம் எழுந்து பிறகு எழுதுவதே நாம் அறியக்கூடியது. ஆனால் எழுத ஆரம்பித்தபின், ஓரிரு பக்கங்கள் எழுதியவுடன் உற்சாகம் வருவதுண்டு. இதுபோன்ற இயற்கை அமைப்புண்டு. பல வருஷங்களாகப் பிரிந்துள்ள நண்பர்கள், கணவன், மனைவி எதிரிகளாக நினைத்தாலும் பழக ஆரம்பித்தபின் துவேஷம் மறைந்து, பழைய பிரியம் எழுவதுண்டு. பள்ளியை முடித்தபின் காலேஜில் சேர்ப்பார்கள். முடிக்காமல் சேர்க்கமாட்டார்கள். மனம் உலுக்கப்படுவதை நிறுத்தாமல், யோக அம்சங்களானச் சரணாகதி போன்றவை நிலைக்காது என்பது உண்மை. பள்ளியை முடித்து கல்லூரிக்கு வருவதுபோல் சட்டத்தைத் திட்டவட்டமாகப் போட்டால், எல்லையைக் கடந்து வரும் திறமையுள்ள பலருக்கு இது தடையாக அமையும். உலுக்கும் எண்ணத்தை விலக்க முயன்றால், விலக்க முடியாது எனத் தெரியும். சில சமயங்களில் அது வலுப்படும். எனவே உலுக்கும் எண்ணத்தை சற்றுப் புறக்கணித்து உயர்ந்ததை ஏற்று அதனுடன் நெருங்கி வந்தால், உலுக்கும் எண்ணம் வலுவிழந்து மறைவதைக் காணலாம். இதுபோல் எல்லைக்கோட்டைத் தாண்டுதல் முடியும்.

குளத்தில் அடிமட்டத்தில் சேறுள்ளது. நீர்மட்டம் உயர்ந்தால் நீர் தெளிவாக இருக்கும். அதனால் சேறு போய்விட்டது என்று பொருளன்று. நம்மை உலுக்கும் எண்ணங்கள் யோகசித்தி அளவுகடந்து முதிர்ந்து கனிந்த பிறகும் அடியில் குளத்துச் சேறுபோல் இருக்கும். பூரணயோகம் திருவுருமாற்றத்தை நாடுவது. முதலில் மனமும், பிறகு உணர்வும், முடிவில் உடலும் திருவுருமாற்றம் அடைய வேண்டும். இங்கு நாம்



பேசுவது திருவுருமாற்றமில்லை. அதற்கு ஆரம்ப நிலையான ஆர்வம், சரணாகதி, சமர்ப்பணம் ஆகியவை. மனத்தை நிலைப்படுத்தி ஒரு சில யோக அம்சங்களைப் பெறுதல் முதல் நிலை. அதனால், உலுக்குவதைப் புறக்கணித்து, சமர்ப்பணத்தை நாடுதல் பெரும் பலனைத் தரும். அடுத்த நிலையில் மனம் திருவுருமாற்றமடைய இதே முறை பலன் தரும் எனினும், இந்த அளவு பலன் இருக்காது. அடுத்தாற்போல் உணர்ச்சி திருவுருமாற்றமடையும்பொழுது பலன் மேலும் குறைவாக இருக்கும். அன்னை, இவையிரண்டும் எளியவை என்கிறார். முடிவான உடல் திருவுருமாற்றத்தில் இம்முறை எதிரான பலன் தரும். ஏனெனில் உடலே சேறு. சேற்றை விலக்கி, மனத்தில் திருவுருமாற்றத்தை நாடினோம். உடலில் சேற்றையே திருவுருமாற்றம் செய்ய வேண்டும்.

கொலை, கொள்ளை, நடந்ததைப்பற்றிப் படிக்கும்பொழுது மனம் அருவெறுப்பு அடைகிறது. நம்மூரில், நம் குலத்தினரைக் கொலை செய்த விவரத்தைப் படித்தால், மனம் சலனமற்றுக் கேட்டுக்கொண்டிருந்தால், மனம் திருவுருமாற்றமடைந்ததாகப் பொருள். உடலில் ஊசியால் குத்தினால், தேள் கொட்டினால், வலி தெரியாமல், வலிக்குப் பதிலாக ஆனந்தம் எழுந்தால் உடல் திருவுருமாற்ற மடைந்ததாகும்.

நாமிருப்பது முதல் நிலையின் முதற்படி. இங்குச் சில உபாயங்களைப் பயன்தரும் வகையில் பின்பற்றலாம். யோக வாழ்வை மேற்கொள்ள இந்த உபாயமும், இதுபோன்ற எந்த உபாயமும் அதிகப் பலன் தரும். யோகத்தை மேற்கொண்டால் பலன் குறையும். யோகம் முதிர்வதால், உபாயங்கள் பயன் தாரா. தடையாகவுமிருக்கும். அந்நிலையில் நமக்கு ஒன்றே ஒன்றுதான் உதவும், அது sincerity உண்மை என்கிறார் அன்னை.

❋ ❋ ❋

**615) இறைவனின் செயலை ஸ்பர்சிக்கும் உணர்வு நன்றியறிதலாகும்.**

கண் ஒளியை ஸ்பர்சிப்பது பார்வை. பிறர் குரல் ஒலியாகக் காதில்

விழுவது காது பிறரைக் கண்டு கொள்வதாகும். வெளியில் உதவியிருப்பதையோ, ஆபத்திலிருப்பதையோ மனம் கண்டுகொள்வது அறிவு எனப்படும். உலகமே இறைவன். உலகில் இருப்பவை அனைத்தும் இறைவன். அசைவெல்லாம் அவன். அணுவெல்லாம் அவன் என மனம் அறிகிறது. ஆனால் நிதர்சனமாக இல்லை. ஆன்மாவுக்கே அது நிதர்சனமாக இருக்கும். ஆன்மவிழிப்புற்று – சைத்தியப்புருஷன் வெளிவந்து – இறைவனை அவன் செயல்களில் காணும்பொழுது இறைவனின் ஸ்பர்சத்தை உணர்கிறது. அந்நேரம் கருணை உள்ளே எழுகிறது. அவ்வுணர்வை நன்றியறிதல் என நாம் அறிகிறோம்.

ஓர் ஊரில் ஒரு பள்ளி சிறப்பான ரிஸல்ட் கொண்டுவந்தால் அது மாணவர்கட்குச் செய்யும் சேவை. அது அனைவருக்கும் தெரிந்தது. எவரும் அதற்காகப் பள்ளி நிர்வாகத்திற்கு நன்றியுடையவராக இருப்பதில்லை. அப்பள்ளியைப்பற்றிப் பேச நேர்ந்தால் நல்ல அபிப்பிராயம் சொல்வார்கள். சமூகத்தில் நமக்கு கடை, வக்கீல், காய்கறித்தோட்டம், முனிசிபாலிட்டி, பள்ளி, போலீஸ் ஸ்டேஷன் மற்ற ஊர்களிலில்லாத நல்ல சேவையைச் செய்வதுண்டு. அவருக்கு நன்றி சொல்லவேண்டும் என நமக்குத் தோன்றுவதில்லை. நல்ல கடையோ, கெட்ட கடையோ, கடை வீதி மக்களுக்குச் செய்யும் சேவை பெரியது. ஒரு நாள் கடையில்லை எனில் சிரமம். சிறப்பான இடங்களுக்கே நன்றி சொல்லத் தோன்றாதபொழுது, கடை வீதிக்கும், ரோடுக்கும் நன்றி சொல்லவேண்டும் என்ற கருத்தே வியப்பாக இருக்கும். கடை வீதியில்லாத குக்கிராமம், ரோடில்லாத ஊர், நல்ல பள்ளிகளில்லாத டவுன், திறமையான வக்கீல் இல்லாத கோர்ட், போலீஸ் ஸ்டேஷனில்லாத இடத்தில் அவை தேவைப்படும் நேரம், அவற்றின் அருமை தெரியும். இருந்தால் அவற்றைப் போற்றுவதில்லை.

கண்ணுக்கு நேராகத் தெரியும் சமூகஸ்தாபனங்களை நாம் பொருட்படுத்துவதில்லை. நகரத்திலிருந்து ஒருவர் கொஞ்சநாள் கிராமத்தில் தங்கியிருக்கும்பொழுது, கிராமப்பஞ்சாயத்துக் கூடி ஒரு குடும்பப்பாகப் பிரிவினையில் அண்ணனுக்கு 8 காணியும், தம்பிக்கு 11 காணியும் கொடுக்க அநியாயமாகத் தீர்ப்பளிக்கிறார்கள். தம்பியால் அதை மீற



முடியவில்லை என்றபொழுது நகரப்புறத்தில் இது நடக்காது. அது நாகரீகம் உள்ள இடம். அதர்மம் நடக்காது என அறிகிறோம். நாகரீகமான இடங்களில் பொதுவான பாதுகாப்பு எந்த அளவு இருக்கிறது எனத் தெரிய நாகரீகமில்லாத இடங்களில் வசித்தால் தெரியும். தமிழ்க் குடும்பம் பீகாரிலிருந்தபொழுது, அக்குடும்பப் பெண்ணை ஒருத்தி வந்து வேலை கொடுப்பதாக அழைத்துப்போய் விபசார விடுதியில் சேர்த்ததைப் போலீஸில் சொன்னால், “இந்த விஷயத்தை இத்துடன் விட்டுவிடு. தொடர்ந்தால் உன் உயிருக்கு ஆபத்து” என்று போலீஸ் சொல்லவே அவர்கள் தமிழ்நாட்டுக்கு ஓடி வந்துவிட்டார்கள். நம்மூர் போலீஸ் ஆதரவு அளித்து ஊருக்குப் போகப் பணம் கொடுத்தது. வெளியூர் போனால் உள்ளூர் அருமை தெரிகிறது. சமூகம் மனிதனுக்கு அளிக்கும் ஆதரவு, பாதுகாப்பு வெள்ளிடை மலையாக உள்ளது. நாம் அதை அறிவதில்லை. அறிந்தால் நன்றி சொல்வதில்லை.

“நீ இன்று வாழ்வில் உயர்ந்துவிட்டால், ஏதோ ஒரு காலத்தில் உனக்கு உதவியவரை நினைவுபடுத்திக் கொள்” என்ற சொல்லை Lions Clubஇல் பிரபலப்படுத்தினார்கள். குடும்பம் செய்தது ஆயிரம் உதவிகள். நண்பர்களும், உறவினர்களும், ஊராரும் அன்றாடம் உதவிகளைச் செய்தபடியிருக்கிறார்கள் என்பதை நாம் உணருவதில்லை. பிறர் வாழ்வில் நாம் எப்படிப் பங்கு கொள்கிறோம் என்றறிந்தால், அதன் மூலம் நம் வாழ்வில் தினமும் எத்தனை ஆதரவுகள் வருகின்றன என்றறியமுடியும். இவற்றையெல்லாம் காணும் தெளிவு நமக்கிருப்பதில்லை.

இறைவன் செயலை அறிவதும், காண்பதும், அதனால் தீண்டப்படுவதும் மனிதனுக்கில்லை, ஆன்மாவுக்குண்டு. அதுவே நன்றியறிதலுக்கு விளக்கம் என்கிறார் அன்னை.

❊ ❊ ❊

**616) புதுமை பொங்கி உணர்வைக் கடந்தால், நிறைவு ஏற்படும். வெளியிலிருந்து அது வந்தால் தற்காலிகமா கவும், உள்ளிருந்து எழுந்தால் நிரந்தரமாகவுமிருக்கும்.**

மனிதனுக்குரிய நிலைகள் பல. பொதுவாக நாம் நன்றாக இருக்கிறோம் (நல்லா இருக்கேன்), நன்றாக இல்லை, எதுவும் சரியில்லை, சுறுசுறுப்பாக இருக்கிறது, எல்லாம் நன்றாக இருக்கிறது இப்படியே இருந்தால் தேவலை, ஏதோ இருக்கிறேன், பிரச்சினை என்று ஒன்றும் இல்லை ஆனால் சுரத்தில்லை, நல்ல காலம் வரும் போலிருக்கு, நல்ல காலம் நமக்கும் வந்துவிட்டது, அதிர்ஷ்டமே வந்துவிட்டது, சப்பென்றிருக்கிறது, ஒரே எரிச்சலா இருக்கிறது, விரக்தியாக இருக்கிறது, ஏன் பொழுது விடிகிறது என்றிருக்கிறது, நாளை எண்ணிக் கொண்டிருக்கிறேன் என்பன போன்ற மனநிலைகளை நாம் அறிவோம். விளக்காமல் தெளிவாகும் நிலைகள் இவை.

அவசியமான தேவைகள் (உணவு, உடை, வீடு, செலவுக்குப் பணம்) உள்ள நிலையொன்று, இல்லாத நிலை மற்றொன்று. தேவைகளைப் பெறும் திறமையிருந்து தேவை பூர்த்தியாவது, அத்திறமையின்றி வேறு வசதிகளை நம்பி அவை பூர்த்தியாவது; தேவையில் பிரச்சினையில்லாமல் பிரியம் உள்ள நிலை, இல்லாத நிலைகள் அடுத்தவை; தேவையும், பிரியமும் குறைவில்லாமல், நம் திறமை, அறிவால் செய்வது கூடிவருவதால் வெற்றிபெறும் நிலை, அவை குறைந்து கூடிவாராத நிலை; தேவை, பிரியம், திறமை, அறிவு இருந்து பிறர் நம்மை ஏற்கும் நிலை, போற்றும் நிலை, அவையிருந்தும் பிறர் ஏற்காத நிலை, போற்றாத நிலை; அடிப்படைத் தேவையில் ஆரம்பித்து பிறர் போற்றும் நிலைவரை இருப்பதும், இல்லாததும் கலந்த பல்வேறு நிலைகளில் மனிதனிருப்பதை முதலில் சொன்ன வழக்குச் சொற்களால் நாம் குறிப்பிடுகிறோம்.

தேவை உடலுக்கும், திறமை அதன் வெளிப்பாடாகவும்; பிரியம் உணர்வுக்கும்; பிறர் ஏற்பது சமூக உணர்வுக்கும் உரியவை. மனமும், அறிவும் இவற்றைக் கடந்தவை. அதை நாடுபவர்களும், அது உள்ளவர்களும் மிகக் குறைவு.

புதுமை என்பது உடல், உணர்வு, சமூகம், மனம், ஆன்மா ஆகிய எல்லா நிலைகளுக்கும் உரியது. இவ்வளவு நாள் நாம் அறிந்தது போக, புதியதாக எழுவது புதுமை. புதுமை எழுந்தால் புது உணர்வு ஏற்படும். புது உணர்வு புதிய தெம்பை அளிக்கும். வெளி நிகழ்ச்சியோ,



உள்ளுணர்வோ இதை ஏற்படுத்த முடியும். புது தெம்பு அதிக அளவில் எழுந்து உணர்வை மீறிய நிலையில் நிறைவைக் காண்கிறோம்.

தினமும் 3 மைல் நடந்து பள்ளிக்குப் போகும் பையனுக்கு, சைக்கிள் உடல் அளவில் நிறைவைத் தரும். சிறிய தாயார் வீட்டில் பல வருஷம் அன்பில்லாத சூழ்நிலையில் வளர்ந்த பிள்ளை தாய் வீட்டிற்கு வந்தபொழுது உணர்வில் நிறைவு ஏற்படும். கம்பனி பல வருஷமாக நஷ்டத்திலிருந்து, புதுச் சௌகரியத்தால் இலாபம் கண்டால்; மானேஜ்மெண்ட் நம் திறமையைப் பாராட்டினால்; கணவன் தன்னைப் பிரிந்திருந்த காலத்து வாடிவிட்டான் என்று மனைவி புரிந்துகொண்டால் உணர்வில் புதிய நிலை ஏற்பட்டு நிறைவு எழும். பத்து வருஷமாகத் தனக்குப் புரியாத பாடத்தை M.A. வகுப்பில் நடத்திச் சமாளிப்பவருக்கு அது புரிந்தால் மனநிறைவு ஏற்படும். ஏற்படும் புது நிலை அளவு கடந்திருந்தால், உணர்வு எழுவதற்குப் பதிலாகப் பொங்கி எழும். பொங்கி எழுந்தால் ஏற்படுவது நிறைவு. பிறரை நம்பிய சூழ்நிலையிலிருந்து வருவது தற்காலிகம். நமக்கே உள்ளே திறமை, தெளிவு ஏற்பட்டு அதனால் ஏற்படும் நிறைவு நிரந்தரமானது.

* * *

## 617) வெளியிலிருந்து ஒரு நிகழ்ச்சி மூலம் வரும். உள்ளிருந்து வரும்பொழுது ஓர் இலட்சியம், அல்லது தெய்வீக ஆர்வத்திலிருந்து வரும் (Refer 627)

*புற நிகழ்ச்சி, உள்ளுறை இலட்சியம் நிறைவு தரும்.*

இந்த course படிப்பை மாற்றப்போவதால், பரீட்சை எழுதியவர்க்கெல்லாம் பாஸ் போட்டுவிட்டார்கள். சர்க்கார் கண்ட்ரோல் வந்துவிட்டதால் நம் சரக்குக்குக் கிராக்கி வந்துவிட்டது; பெரிய இடத்துப் பெண் நம் பிள்ளையை விரும்புவதால் நம் நிலை உயருகிறது; உள்ளூருக்குக் காலேஜ் வருவதால் மகன் படிப்புக்குச் செலவில்லை என்பவை வெளி நிகழ்ச்சி மூலம் வரும் சௌகரியம். சௌகரியத்தை

அனுபவித்து அதனால் புது உணர்வு பொங்கி நிறைவு வந்தாலும், மனதில் நம்மைப்பற்றி நமக்குள்ள அபிப்பிராயம் உயர வழியில்லை என்பதால், இந்த நிறைவு நாளடைவில் கரைந்துவிடும்.

குடும்பத்திற்காக உழைக்கும் இளைஞன், கொள்கைக்காக உயிரைக் கொடுக்கும் தொண்டன், கணவனுடைய திருப்திக்காக வாழும் மனைவி, ஒரு ஸ்தாபனத்தை நிறுவும் முயற்சியை மேற்கொண்ட சேவை, தியானத்தை நாடும் ஆர்வம், மௌனத்தை விழையும் மனம், அன்னைக்குச் சேவை செய்ய எழும் ஆர்வத்தைப் பூர்த்தி செய்யும் உற்சாகம் போன்றவை உள்ளிருந்து எழுபவை. உள்ளிருந்து எழும் ஆர்வம் தரும் நிறைவு நிரந்தரமானது.

தாமிறக்கும் தருணத்தில் ‘‘வாழ்நாள் முழுவதும் ஒரு இலட்சியத்திற்காகச் செலவிட்டேன் என்ற நிறைவு எனக்குண்டு” என்று லெனின் கூறினார். தம்மைச் சுட்ட எதிரியையும் தண்டிக்க வேண்டாம் என மகாத்மா காந்தி சொன்னபொழுது, கடைசி மூச்சுள்ளவரை தம் கொள்கையைப் பின்பற்றிய நிறைவை அவர் வெளிப்படுத்தினார்.

லெனினுக்கும், மகாத்மாவுக்கு மட்டும் உள்ளதன்று இந்நிறைவு. என்னைக் கொடுமைப்படுத்திய மாற்றாந்தாய்க்கு, வேலைக்குப் போனவுடன் முதற்காரியமாகப் பெரிய நகை செய்து கொடுத்தேன், அவருடைய பிள்ளைகளைப் படிக்க வைத்தேன் என்பவர், ‘நான் என் கடமைகளைத் தகப்பனாருக்கும், தம்பிகளுக்கும் செய்வதற்கு எந்தத் தடையையும் அனுமதிக்கமாட்டேன்’ என்ற இலட்சியத்தைக் கொண்டார். அவருக்கும் இம்மனநிறைவு மகாத்மாவுக்கு ஏற்பட்டதுபோல் ஏற்படும்.

நாமிருக்கும் நிலை நம் நிறைவை நிர்ணயிக்காது. நம் ஆர்வமும், இலட்சியமும் நிறைவை நிர்ணயிக்கும். உடலெல்லாம் எரியும் மெழுகுவர்த்தியைப் பொறுத்தியபின்னும் இலட்சியத்தை விட்டுக்கொடுக்காதவர், அதுவே தம் வாழ்நாளில் மிகப் பெரிய நிறைவான நேரம் என்றார்.

குழந்தைக்குக் கடமையைச் செய்வதும், பெற்றோர் பொறுப்பைப் பிரியமாக ஏற்பதும், தன் வாழ்விலுள்ள எந்த நிலைமைக்கும் உரிய



இலட்சியத்தைச் செலுத்துவதும், ஆழ்ந்த மன நிறைவைக் கொடுக்கும். அம்மன நிறைவு, புதுத் தெம்பை அளிக்கும், புதுமையை எழுப்பும். உள்ளம் புதுமையானால், உணர்வு புது மெருகு பெறும்.

சர்க்கார் ஆபீசில் 1¼ரூபாய் கட்டிப் பெற வேண்டிய செய்தியைக் கட்சிக்காரன் நண்பர்மூலம் ரிஜிஸ்டரைப் பார்த்து தெரிந்து கொண்டான். அதனால் ஆபீசுக்குச் சேரவேண்டிய 1¼ரூபாய் நஷ்டமாகிவிட்டது, அதுவும் தம் ஆபீசில் நடந்தது என்பதால், ஆபீசர் அந்த 1¼ரூபாயைக் கட்டி அந்த விஷயத்தை தம் பெயரில் எடுத்துக் கொண்டார். ஆயுள் முடியும்வரை இவர் மனத்தின் நேர்மை இவருக்கு இலட்சிய உணர்வையும், புதுமையையும், புத்துணர்வு பொங்கும் நிறைவையும் அளிக்கும்.

❊ ❊ ❊

### 618) நிறைவு செறிந்து வளமான உணர்வு தோன்றும்.

பல தலைமுறைகளாகச் செல்வமுள்ள குடும்பங்களிலுள்ள குழந்தைகள் உடல் நலம் நிறைந்திருப்பதுடன், உடலே செழிப்பாக இருக்கும். இதைச் செல்வச் செழிப்பு என்கிறோம், அதேபோல் பல தலைமுறைகளாக சமஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம் பயின்ற குடும்பங்களில் குழந்தைகள் முகம் பிரகாசமாக இருக்கும். அதே போல் பரம்பரையான பக்திமான் குடும்பங்களில் குழந்தைகள் முகம் “தளதள” என உணர்வின் செழிப்பு நிறைந்திருக்கும். பரம்பரையாக எந்தத் திறமை, வளம், கலை, நுணுக்கம், செல்வம், சங்கீதம், சொத்து, தைரியம், தொழில் நுணுக்கம் நிறைந்திருந்தாலும், அந்தக் குடும்பக் குழந்தைகளின் முகம் அதைக் காட்டும்.

புதுமை, அதனால் எழும் சக்தி, அது உணர்வைக் கடக்கும் நிலையில் நிறைவு என்பது ஒரு நிலை பூர்த்தியாவது. அந்நிறைவு செறிந்து தோன்றும் உணர்வு, விறுவிறுப்பான உணர்வாகவோ, உற்சாகம் நிறைந்த உணர்வாகவோ, வேகம் நிறைந்த உணர்வாகவோ இருக்கா. அது வளம் நிறைந்ததாகும். வளம் நிறைந்த உணர்வு நிதானமான

இனிமையுடையதாகும். இத்துடன் அந்நிலை முடிகிறது. பிறகு எழும் அடுத்த நிலைக்குரிய கட்டங்களும் – புதுமை, சக்தி, உணர்வைக்கடத்தல், நிறைவு, செறிவு, வளமான உணர்வு – அவையேயாகும்.

வாழ்வின் முன்னேற்றம் உழைப்பில் ஆரம்பிக்கின்றது. அது சிறந்து skill திறனாகிறது. அது உணர்வால் சக்திபெற்று, அறிவால் சிறந்து அறிவை உணர்வு மீண்டும் ஏற்றால் பூர்த்தியாகிறது.

ஒரு தலைமுறையில் உழைத்துப் பெறுவதை அடுத்த தலை முறையில் குழந்தைகட்குப் பெற்றோர் அறிவாகவும், பொருளாகவும் தர முடிகிறது. அதேபோல் ஒரு நிலையிலுள்ளவர் சிரமப்பட்டுப் பெறுவதை அடுத்த நிலையில் சிரமமில்லாமல் பெற முடிகிறது. படிப்பாலும், வாழும் இடத்தாலும், வயதாலும், குடும்பத்தின் நிலையாலும், வாழும் சமூகத்தின் பண்பாலும், அனுபவத்தாலும், நாட்டின் வளம் நிர்ணயிப்பதாலும், நாம் பல்வேறு நிலைகளில் இருக்கிறோம். படிப்பு அதிகமான குடும்பம், படிக்காத குடும்பம் சிரமமாகச் சாதிப்பதை எளிதாகப் பெறுகிறது. நகரத்திலுள்ளவர் எளிதாக இயல்பாகப் பெறுவதைப் பெற கிராமத்தார் பெருமுயற்சி எடுக்க வேண்டியிருக்கிறது. பண்பான குடும்பம் இயல்பாகப் பெறுவதை பண்பில்லாத குடும்பம் இன்றும் இரு தலைமுறைகளுக்குப் பெற முடியாது. நாட்டிலுள்ள நிலைகள் பல. மனிதனுள்ள நிலைகள் பல. அவற்றுள் நாம் ஏதோ ஒரு நிலையிலிருக்கிறோம். அதிகபட்சம் நம்மால் ஒரு சமயம் ஒரு நிலையைத்தான் தாண்டமுடியும். சமூகத்திலுள்ள சூழ்நிலை உதவியாலும், நம் முயற்சியாலும் அதைச் சிலர் பெற முடிகிறது. பலர் பெற முடிவதில்லை. பெரும்பான்மையோர் முயல்வதில்லை. தாமுள்ள நிலையிலிருந்து அடுத்த நிலைக்குப் போக முடியும் என்று பெரும்பாலோர் நம்புவதில்லை.

அன்னை வாழ்வைக் கடந்த நிலையிலிருப்பவர். அத்துடன் வாழ்வின் எல்லா நிலைகளையும் தம்முள் சாரமாகக் கொண்டவர். அன்னையை அறிந்து, உணர்ந்து, ஏற்றுக்கொண்டால் நாமுள்ள நிலையிலிருந்து அடுத்த நிலைக்குப் போக முடியும். அன்னையை அதிகமாக ஏற்றுக்கொள்ள தொடர்ந்து முனைந்தால், தொடர்ந்து



அடுத்த நிலைக்குப் போய்க் கொண்டேயிருக்கலாம்.

புதுமைபொங்குவதில் ஆரம்பித்து........... வளமான உணர்வுவரை உள்ள சங்கிலித்தொடரை அறிந்துகொண்டால், அது நம் வாழ்வில் செயல்படும்படி நடந்தால் மேற்சொன்ன முன்னேற்றம் விரைவாக நடைபெறும். நாம் செய்ய வேண்டியது புதுமையை நாடுவதேயாகும். நிறைவைத் தேடுவதாகும், அறிந்ததை உணர்வால் ஏற்றுக்கொள்ள முனைவதாகும்.

* * *

**619) ஆன்மாவை வாழ்வில் அறிந்தாலும், வாழ்வை உள்ளே கண்டாலும், அது பரம்பொருள் வெளிப்படும் தருணம். அதுவே ஆன்மீக நிறைவு.**

***வாழ்வில் காணும் பரமனும் உள்ளே தெரியும் வாழ்வும் பரமனே.***

மனம் இரு பகுதிகளாக உள்ளது. நாம் மனம் என அறிவது மேல் மனம். மேல் மனம் வாழ்வுக்குரியது. முழு வாழ்வும் இதனுள் அடங்கியது. நாம் நினைப்பது, கேட்பது, பார்ப்பது, அனைத்தும் மேல் மனத்தைச் சார்ந்தன. இறைவன் இதனுள் வருவதில்லை. உள்மனம் என ஒன்றுண்டு. இதன் பகுதிகள் பல. இது பரந்து விரிந்தது. நாம் ஒரு கட்டத்திலிருந்தால் ஆயிரம் ஒலியில் சிலவற்றைக் கேட்கிறோம். உள்மனம் அந்த ஆயிரம் ஒலியையும் கேட்கும். பதிவு செய்து கொள்ளும். தேவைப்பட்ட நேரத்தில் அது மேலே வரும். இது யோகத்தால் விடுபட்டால், பிரபஞ்சம் முழுவதும் பரவக்கூடியது. இறைவனை மேல் மனத்தில் சாதாரண மனிதன் காணமுடியாது. தவத்தாலும், யோகத்தாலும் இறைவனைக் காணும்பொழுது, ஆன்மாவைக் காணும்பொழுது, நாம் உள்மனத்திலேயே காண்கிறோம்.

பூரணயோகம், அனைத்தையும் பூரணப்படுத்த முனையும். பூரணயோகத்திற்கு மேலேயும், உள்ளேயும், இறைவனையும், வாழ்வையும் காணவேண்டும். உள்ளே போனால் நிஷ்டை, தவம், சமாதி என்பதால் புலன்கள் அவிந்து வாழ்வைக் காணமுடியாது. வாழ்வும், வாழ்வுக்குரிய

எண்ணங்களும், செயல்களும் உள்மனத்தில் காணமுடியாது.

மேல் மனம் இறைவனுக்கில்லை, உள்மனம் வாழ்வுக்கில்லை என்பது மனிதநிலை. மேல் மனத்திலும், உள்மனத்திலும் இறைவனைக்கண்டு, அதேபோல் இரு இடங்களிலும் வாழ்வைக் கண்டால் பூரண யோக நிபந்தனை பூர்த்தியாகிறது.

இதன் ஒரு பகுதியை மேலே குறிக்கின்றேன். அதுவே பரம்பொருள் வெளிப்படும் தருணமாகும். அது ஆன்மீக நிறைவைத் தரும்.

உடல் ஜடமானது. அதற்குத் தொட்டுப் பார்த்தால்தான் புரியும். புலன்கள் ஓரளவு சூட்சுமமானவை. தூரத்திலிருந்து வரும் வாசனை, உள்ள காட்சி, எழும் சத்தம் ஆகியவை புலன்களுக்கு உணரமுடியும். மனம் முழுவதும் சூட்சுமமானது. அதனால் எங்கும் சஞ்சாரம் செய்யமுடியும். மேகமண்டலத்தையும் எட்டமுடியும். ஆன்மா பிரம்மம். அது சிருஷ்டி முழுவதும் பரவும். உடல் நிறைவுபெற, செயல் பூர்த்தியாக வேண்டும். புலன்கள் நிறைவுபெற, கண்டு, கேட்டு நிறைய வேண்டும். மனம் நிறைய எண்ணம் சிறக்க வேண்டும். ஆன்மா நிறைவுபெற, ஆன்மா பிரபஞ்சம் முழுவதும் ஒரு க்ஷணம் பரவவேண்டும். அந்த நேரம் நாம் இறைவனை மின்னலாகத் தரிசனம் செய்கிறோம். பெரிய கவிகளுக்கு இந்த ஆண்டவன் தரிசனம் கிடைத்த பின்னரே புது வாழ்வு ஏற்பட்டு, பேரிலக்கியம் சிருஷ்டிக்கின்றார்கள்.

எழுத்தாளர், கவி, பாடகி, விளையாட்டு வீரன், அரசியல்தலைவன், கற்புக்கரசி என எந்தத் துறையிலும் சிறந்தவர், இந்த இறைத் தரிசனம் கண்டால் அவர் சிருஷ்டிகர்த்தாவாகி, பேரிலக்கியம், பெரிய சாம்ராஜ்யம், நிறுவுவார்கள். "கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா" எனக் கேட்ட கற்புக்கரசிக்கு, வந்த பிரம்மச்சாரியின் கோபம், அவர் வாழ்வில் முதல் நாள் நடந்த நிகழ்ச்சியைக் காண்பித்தது. உள்மனம் பரந்து விரிந்தது. கடந்த காலத்தையும் தழுவுவது. அதனால் தெரியமுடிகிறது.

பலன் கருதாத கடமையைக்கீதோபதேசப்படி செய்தால் பலனைக் கருதும் மனப்பான்மை அறவே அழியும் நேரம் திரை விலகி, தெய்வம் தெரிவது, ஆன்மாவை வாழ்வில் காணும் நேரமாகும்.



❋ ❋ ❋

**620) வளர்ச்சிக்குத் தேவையானதுபோக அதிகசக்தி குழந்தைகட்கும், வாலிபர்கட்கும் உள்ளிருந்து உற்பத்தியாவதால் அவர்கள் உடல் அளவில் ஒரு நிறைவு பெறுகிறார்கள். தொடர்ந்து வெற்றி பெறுபவர் ஒருவர், தமக்குத் தொடர்ந்து கிடைக்கும் வாய்ப்புகளிலி ருந்து தமக்குத் தேவைக்கு மேல் சக்தி பெறுவதால், மனநிறைவு பெறுகிறார். புதிய கருத்து மனதில் தொடர்ந்து ஏற்பட்டால், பழைய மனநிலைகள் அதில் மூழ்கி, புத்துணர்ச்சி எழுகிறது.**

***தேவைக்கு அதிக சக்தி உடல் நிறைவையும், மனநிறைவையும் தரும்.***

குழந்தையின் உடல் வளருகிறது. அதற்குத் தேவையானது physical energy உடலின் சக்தி, உற்சாகம் வளர வேண்டிய சக்தியை உணர்வு அளிக்க வேண்டும். மனம் வளர mental energy மனோசக்தி வேண்டும். ஆத்மா வளர ஆன்மீகச் சக்தி தேவை.

குழந்தை வளர சக்தி எப்படி வருகிறது? உணவிலிருந்து வருவது உண்மை. ஏன் அதேபோல் 50ஆம் வயதில் உணவிலிருந்து அதே போன்ற அபரிமிதமான சக்தி கிடைக்கவில்லை? சோர்ந்திருப்பவனுக்கு நண்பன் கிடைத்துவிட்டால் சோர்வு போகிறது, தோல்வியால் சோர்வடைந்தவனுக்கு வெற்றி கிடைத்தால் சோர்வு, தெம்பாக மாறுகிறது. இது எப்படி? உணர்வு உடலைவிட உயர்ந்தது. மனம் உணர்வைவிட உயர்ந்தது. மனத்தை உணர்வு நாடினால் உணர்வில் சக்தி எழுகிறது. நம் நிலையைவிட அதிகமான உயர்ந்த நிலையை நாடினால் உயர்ந்த நிலையிலுள்ள அதிக சக்தி நம்மை நாடி வருகிறது. உலகில் சக்தி (energy) காற்றைப்போல், வெளிச்சத்தைப்போல் எங்கும் நிறைந்துள்ளது. காற்று நிறைந்த வெளியில் 4 சுவர்களை எழுப்பி நாம் 'வீடு' என்பதனுள்ளிருப்பதால், காற்றோட்டம்

குறைகிறது. மொட்டைமாடியில் காற்று அபரிமிதமாக வீசுகிறது. குழந்தைப் பருவத்தில் குழந்தை புறச்சூழ்நிலையோடு இரண்டறக் கலந்துள்ளது. குழந்தை சாப்பிடும் உணவு, குழந்தையின் உடலைச் சூழ்நிலையோடு இணைப்பதால், அளவிறந்த தெம்புச்சூழலிலிருந்து உள்ளே வந்து குழந்தை வளருகிறது. நாளாக நாளாக குழந்தை மனிதனாகிப் பல கருத்துகளை ஏற்பதால், சூழ்நிலை அவன் ஏற்ற கருத்தின் மூலமே உள்ளே வரமுடியும் என்பதால், நமக்கு குழந்தைபோல் அதிகமான தெம்பு வருவதில்லை.

மேல் நிலைக்கு அதிகத் தெம்பும், கீழ்நிலைக்குக் குறைந்த தெம்புமிருப்பதால், ஒரு நிலை அதனுடைய மேல் நிலையோடு – உணர்வு, மனத்தோடு – தொடர்பு கொண்டால், அதிக சக்தியுள்ளே வர முடிகிறது. வாய்ப்பு, புறச்சூழலைச் சேர்ந்தது. வாய்ப்பை ஏற்றுக்கொண்டால், நம் உணர்வு புறச்சூழலை அதிகமாக ஏற்கிறது. அதனால் அதிகத் தெம்பு பெறுகிறது.

புதியன சூழலை அனுமதிக்கும் கதவு. பழையவை மூடிய கதவு. எனவே புதிய கருத்தை ஏற்றால், சூழல் தன் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வரமுடிகிறது. அதனால் உற்சாகம் பெருகுகிறது.

அதிக சக்தி வளர்ச்சிக்கு உதவும், நாமுள்ள நிலையில் சாதிக்க உதவும். நிறைவுபெற்று, மேலும் சக்தி பெருகினால் அடுத்த நிலைக்குப் போக உதவும். குழந்தையும், பெரியவர்களும் வளருவது அவர்கள் உள்ள நிலையில். கலைஞன், விளையாட்டுவீரன், எழுத்தாளர் போன்றவர்க்கு அடுத்த நிலைக்குப் போகும் வாய்ப்புண்டு. அந்த வாய்ப்பு, புதியன எழுந்தால் கிடைக்கும்.

தொடரும்.

❊ ❊ ❊

**ஜீவிய மணி**

ஞானியும், யோகியும் பிரம்மத்தை சச்சிதானந்தமாக அறிவார்.



# இம்மாதச் செய்தி

**அடக்கம், அன்பு, அருள் ஆகியவை தெய்வத்தின் அம்சங்கள். அடக்கம் உயர்ந்து அன்பாகவோ, அருளாகவோ மாறும் நிலையுண்டு. அந்நிலையில் ஓர் அம்சம் தன் சிறப்பால் அம்சத்திற்கு (பகுதி) உரிய முழுமையான தெய்வமாகிறது. இது பக்தன் தெய்வமாகும் பாதை. ஞானம், பக்தி, கர்மமும் இதே சக்தியை உடையவை. ஞானத்தின் சிறப்பால் பக்தியையும், கர்மத்தின் உயர்வையும் பெறும் நிலையில் பக்தன் தெய்வமாக மாறுகிறான்.**

**அன்பரின் திருவடியில் தெய்வத்தின் திருப்பாதங்களைக் காண்பது உயர்ந்த பக்தி. அதனால் அவற்றைச் சிரமேற்தாங்கும் அடக்கம் பக்தனை அருள் உருவான அன்னையாக மாற்றி அவரை அருள் சுரக்கும் ஊற்றாக மாற்றும்.**

**“பக்தனை அன்னையாக மாற்றுவது அன்பரின் திருவடியில் தெரியும் அன்னையின் பாதங்கள்”.**

❊ ❊ ❊

# லைப் டிவைன்

கர்மயோகி

## IX.The Pure Existent

We sometimes withdraw our gaze. *P. No. 71*
Normally we are preoccupied. *Para 1*
It is an egoistic preoccupation.
It is of limited interests.
They are fleet in nature.
Thus we can look upon the world.
It is a dispassionate view.
It is a conscious search.
It seeks only the Truth.
There is a first result.
It perceives a boundless energy.
It is of an infinite existence.
It is of an infinite movement.
It is also of an infinite activity.
It pours itself out in limitless Space.
It is in eternal Time.
It surpasses infinitely our ego.
The collective ego is surpassed too.
Every ego is thus surpassed.
The aeons have grandiose products.
In the balance of that existence they are dust.



## 9. சத் புருஷன்

நாம் பார்வையை உள்ளே செலுத்தும் நேரம் உண்டு.
பொதுவாக நாம் நம்மை மறந்திருக்கிறோம்.
நம்மை நாம் நம்மில் இழந்திருக்கிறோம்.
அதன் பார்வை குறுகியது.
க்ஷணத்தில் அழியும் தன்மையுடையவை அவை.
உலகை நாம் இப்படிப் பார்க்கமுடியும்.
அது பற்றற்ற பார்வை.
அது ஆர்வத்தின் தேடுதல்.
அது நாடுவது சத்தியம்.
முதற்பலன் தெரிகிறது.
சமுத்திரமான சக்தி தென்படுகிறது.
அது அனந்தம்.
அது முடிவற்ற சலனம்.
அது முடிவில்லாத செயலுமாகும்.
எல்லையற்ற பிரபஞ்சத்தினுள் அது தன்னைப் பொழிகிறது.
காலத்தைக் கடந்த காலம் அதன் அரங்கு.
அதன் முன் நாம் கடுகு.
உலகமே அதன் முன் சிறியது.
எவரும் அதன் பார்வையில் சிறியதாகும்.
யுகங்கள் சாதித்தவை ஏராளம்.
அச்சாதனைகள் முன் அவை தூசியாகும்.

They are but dust of a moment.

Its sum is incalculable.

The numberless myriads count little there.

If counted, it does so as a petty swarm.

We have an instinctive feeling.

According to it, we weave our thoughts.

We see this stupendous world movement around us.

We also see it at work.

We conceive ourselves at the centre.

We understand that is works for our benefit.

We assume it is for our help or harm.

Our chief concern is our egoistic concerns.

Our ego craves, have emotions, ideas and standards.

We think they are its proper business.

We can pause and see.

We perceive it exists for itself.

It does not exist for us.

It has its own gigantic aims.

Its ideas are complex and boundless.

It has its own vast desires.

It wants to fulfil its own delight.

Its standards are formidable and immense.

It looks down at us with indulagence.

Before that our life is petty.

It smiles ironically at us.



க்ஷணத்தில் மறையும் தூசியாகும்.

கடந்ததன் பொருளைக் கணக்கிட முடியாது.

அளவிறந்த அற்புதங்கள் அங்கு அர்த்தமற்றவை.

கணக்கெடுத்தால், அவை அல்பமாகும்.

நாம் நம்மை, தானே இயல்பாக உணர்கிறோம்.

நம் சிந்தனைகள் அதன்படி எழுந்து சிறக்கின்றன.

நம்மைச் சுற்றி இப்பிரம்மாண்டமான உலகம் சுழல்வதைக் காண்கிறோம்.

அதன் செயல்களையும் காண்கிறோம்.

நம்மை அதன் மையமாகக் கொள்கிறோம்.
நமக்காக ஏற்பட்டதாக அதைக் கொள்கிறோம்.

நமக்கு உதவி, உபத்திரவம் செய்ய ஏற்பட்டதாக அதை நினைக்கிறோம்.

நாமே நமக்கு முக்கியம்.

நமக்கு ஏக்கமுண்டு. எண்ணங்களும், உணர்வுகளுமுண்டு.

நம்முடைய தேவைகள் உலகத்தின் கடமை என நினைக்கிறோம்.

நின்று நிதானித்துப் பார்க்கலாம்.

பிரம்மாண்டம் தனக்காக ஏற்பட்டது.

நமக்காக வாழ்வதில்லை அது.

அதன் இலட்சியங்கள் பெரியவை.

சிக்கலானதும், பெரியதுமான எண்ணங்களுடையது அது.

அதன் ஆசைகள் அளவு கடந்த பெரியவை.

தன் இன்பத்தைத் தானே பூர்த்தி செய்ய முனைகிறது.

அதன் தரம் உயர்ந்தது, பயங்கரமானது.

நம்மை அது பரிதாபமாகப் பார்க்கிறது.

அதன் முன் நம் வாழ்வு அல்பமானது.

நம்மைக் கண்டு கேலி செய்கிறது.

It makes us go to the other extreme.
We find ourselvesinsignificant.
We should not form such a positive idea.
It would be an ignorant act.
The facts of the universe are great.
We should not shut our eyes to them.

*Page 71*
*Para 2*

This is a boundless Movement.
It does not consider us unimportant.
We learn this from Science.
It tells us the case is minute.
The devices in Nature are cunning.
It bestows an intense absorption on works.
It does so to the smallest of works.
Nor does it distinguish the largest of them.
This energy is mighty.
It is a mother.
It is an equal and impartial mother.
It is saman brahma.
It is a great term of the Gita.
It forms the system of sums.
It organises the life of an ant hill.
In both, its intensity is the same.
Even the force of movement is the same.
Size is an illusion.



அதனால் நாம் மறுகோடிக்குப் போகிறோம்.
நாம் பொருட்டல்ல எனக் கருதுகிறோம்.
அதுபோல் தீர்மானமான முடிவுக்கு வரக்கூடாது.
அது அறியாமை.
பிரபஞ்சம் பெரியது.
நாம் அதை மறக்கக் கூடாது.

இது கட்டுக்கடங்காத பிரவாகம்.
நம்மை அது அர்த்தமற்றதாக நினைக்கவில்லை.
விஞ்ஞானம் அதை நமக்கு அறிவுறுத்துகிறது.
இயற்கையின் கவனம் பெரியது.
இயற்கையின் உபாயங்கள் அறிவுடையவை.
வேலைகளை ஊன்றிக் கவனிப்பது இயற்கையின் இயல்பு.
வேலை சிறியது என்பதில்லை.
பெரியது என்பதும் பொருட்டன்று.
சக்தி பிரமாண்டமானது.
அது தாய்.
பாரபட்சமற்ற தாய் இயற்கை. நிதானமானது.
சமம் பிரம்மம் எனப்படும்.
அது கீதையின் வாசகம்.
சூரிய மண்டலத்தை உற்பத்தி செய்ததும் அதுவே.
எறும்புப்புற்றைச் செய்ததும் அதுவே.
இரண்டும் அதற்குச் சமம்.
செலவிட்ட சக்தியும் இரண்டிலும் ஒன்றே.
பரிமாணம் மாயை.

Quantity is another illusion.

In illusion we find one great, the other petty.

We are free to look at the mass of quantity.

Or, we can look at the force of quantity.

Then, we find, the ant is greater than the solar system.

We know the ant lives inside the solar system.

And man is greater than inanimate Nature.

Man reamins greater than even all of Nature.

Again it is an illusion.

It is an illusion of quality.

We can go behind quality and quantity.

Both are aspects of the intensity.

It is the intensity of the movement.

We realise the truth.

Brahman dwells in all.

It dwells equally in all existences.

Brahman is equally partaken by all.

That is the truth of the being.

Brahman is equally distributed in all.

It is so in its energy.

But this too is an illusion of quantity.

The Truth is different.

Brahman dwells in all.

It is indivisible.

It looks as if divided.



எண்ணிக்கையும் மாயை.

மாயையால் ஒன்றைப் பெரிதாகவும், அடுத்ததைச் சிறியதாகவும் நினைக்கிறோம்.

நாம் பரிணாமத்தைக் கணக்கிடலாம்.

அல்லது சக்தியின் தன்மையைக் கருதலாம்.

அதன்படி எறும்பு சூரிய மண்டலத்தைவிடப் பெரியது.

ஆனால் எறும்பு சூரிய மண்டலத்தின் பகுதி.

மனிதன் ஜடமான இயற்கை அனைத்தையும்விடப் பெரியவன்.

முழுப் பிரபஞ்சத்தைவிடவும், மனிதன் பெரியவன்.

அதுவும் மாயை.

குணம் என்ற அளவில் இது மாயை.

பரிமாணத்தையும், குணத்தையும் கடந்து செல்ல முடியும்.

இரண்டும் சலனத்தின் அம்சங்களாகும்.

அது சலனத்தின் தீவிரமாகும்.

அதன் வழி சத்தியம் தெரிகிறது.

அனைத்திலும் உள்ளது பிரம்மம்.

எல்லாவற்றிலும் பிரம்மம் சமமாக இருக்கின்றது.

அனைத்தும் பிரம்மத்தைச் சமமாக ஏற்கின்றன.

அது - புருஷன் - சத்தியத்தின் அம்சம்.

பிரம்மம் அனைத்திலும் சமமாகப் பரிமாறப்பட்டுள்ளது.

அது சக்தியின் அம்சம்.

இதுவும் - அளவு - பரிமாணத்தின் மாயை.

சத்தியம் வேறு.

பிரம்மம் அனைத்திலும் உள்ளது.

அது அகண்டம்.

பிரம்மம் கண்டமாகத் தென்படுகிறது.

It looks as if distributed.

We can look again.

We can perceptively observe.

Let us not be dominated by intellectual concepts.

Let us be informed by intuition.

It will culminate in knowledge.

That is a knowlege by identity.

Now we make a discovery.

It is other than the mental consciousness.

It is indivisible.

It gives itself wholly to all.

It does not give an equal part of itself.

It gives at one and the same time.

The solar system and the ant hill are the same for it.

To Brahman there is no whole and its parts.

Each thing is all itself.

Each benefits by the whole of Brahman.

Quality and quantity differ.

The self is equal.

The form varies infinitely.

Manner too varies similarly.

The force of action also varies.

But the energy is the same in all.

It is eternal, primal and infinite.

Force of strength goes to make a strong man.



பரிமாறப்பட்டதாகக் காண்கிறது.

நாம் மீண்டும் அதைப்பற்றிச் சிந்திப்போம்.

கூர்ந்து கவனிப்போம்.

அறிவின் ஆட்சியை ஒதுக்குவோம்.

ஞானம் செயல்படட்டும்.

அது பிரம்ம ஞானத்தில் முடியும்.

அது ஐக்கியம் தரும் ஞானம்.

இப்பொழுது புதியது தென்படுகிறது.

நாம் காண்பது மனத்தின் ஜீவியமன்று.

பிரம்மம் அகண்டம்.

தன்னை அனைத்திற்கும் முழுமையாகத் தரவல்லது.

சமமான பகுதிகளைத் தரவில்லை.

ஒரே சமயத்தில், சூரியமண்டலத்திற்கும், எறும்புப் புற்றுக்கும் தன்னை முழுமையாகத் தருகின்றது என்பது விளங்கும்.

பிரம்மத்திற்கு முழுமை, பகுதி என்பதில்லை.

எதுவும் முழுமையான பிரம்மமே.

பிரம்மத்தின் முழுமைக்குப் பலனுண்டு. எதற்கும் அது உண்டு.

தரமும், அளவும் மாறும்.

ஆத்மா எங்கும் சமம்.

தோற்றம் முடிவில்லாமல் மாறும்.

செயலின் தோற்றமும் அதுபோல் மாறும்.

செயலின் சக்தியும் அளவு கடந்து மாறும்.

ஆனால் எங்கும் சக்தி சமம், ஒன்றேயாகும்.

அது காலத்தைக் கடந்தது, ஆதியானது, அளவற்றது.

வலிமையின் திறன் பலவானை உருவாக்கும்.

Force of weakness makes the weak.
Both forces are equal.
One is not a whit more than the other.
In one the energy expresses.
In the other the energy is repressed.
The energy spent in both is the same.
Not only these.
Negation and affirmation are likewise equal.
Silence and sound too are similarly equal.

Contd.

## ஸ்ரீ அரவிந்த சுடர்

இறைவன் நம்மை நாடி வரும்பொழுது (descent) ஆர்வம் இருப்பதில்லை. ஆர்வம் எழும்பொழுது மனிதன் எப்படி இருக்கிறான் என்பதை பகவான் விவரித்திருக்கிறார். எல்லாப் பழக்கங்களிலிருந்தும் விலகினால் ஆர்வம் எழும்.

*பழக்கம் விலகினால் ஆர்வம் எழும்.*



வலிமையற்றவனின் திறன் பலஹீனனை உருவாக்கும்.
ஆனால் இரு திறன்களும் சமம்.
ஒன்று அடுத்ததைவிட மயிரிழை மாறாதது.
ஒன்றில் திறன் வெளிப்படுகிறது.
அடுத்த இடத்தில் திறனை மறைக்க முயல்கிறோம்.
இரண்டிலும் செலவாகும் சக்தி சமம்.
அது மட்டுமன்று.
உடன்பாடும், எதிர்மறையும் அதேபோல் சமமானவையே.
மௌனமும் சப்தமும் அதேபோல் சமம்.

தொடரும்

## ஸ்ரீ அரவிந்த சுடர்

நாடுவதை நிறுத்தி, பார்வை உள்ளே சென்றால், வாழ்வு அற்புத உணர்வாக அணைக்கும்.

*உள் நோக்கின் அற்புதம்.*

# அன்பர் கடிதம்

அன்புள்ள அசோகனுக்கு

அன்னையை நினைத்துச் செய்த வேலை என் மனத்தை மலர்போல மணம் வீசசெய்தது. என்னுடைய கேள்விக்குப் பதில் எழுதியது பற்றி நன்றி...அன்னை Sincerity என்று கூறுவதைச் சொல்வது எளிது. செய்வது கடினம்.

– பிரியா.

மேற்சொன்ன கடிதம் விரிவானது. அதில் ஒரு வாக்கியத்தை மட்டும் மேலே எழுதியுள்ளோம். இக்கடிதம் வரும் முதல் நாள் இங்கு சூழல் சிறந்து, மலர்ந்து, இனித்தது. அதே சமயம் இந்த சீசனுக்கு Grace மலர் வர ஆரம்பித்ததால் 12 மலர்கள் வந்தன. கம்ப்யூட்டர் வேலை கடுமையாக இருப்பதாகப் பிரியா எழுதியிருந்தார். சமர்ப்பணம் செய்தால் கடுமை இனிமையாகும் எனப் பதில் எழுதியதற்கு இந்த e-mail வந்துள்ளது. அன்னைக்குத் தியானத்தைவிடச் சமர்ப்பணம் செய்யப்பட்ட வேலை பிடிக்கும். இறைவன் முன்னால் நிற்கும் உணர்வைக் கடிதம் விவரிக்கிறது. பிரியா அப்படி உணர்ந்த நேரம் அதே சூழல் இங்கு தெரிந்தது. Grace மலர் வந்து தன் அருள் முத்திரையைக் குத்தியுள்ளது. அதே நேரம் 3 பேர் காணிக்கை வந்தது. காணிக்கை அனுப்பிய அன்பர்கள் மனநிலையையும் சூழல் காட்டுகிறது. அடுத்த ஆண்டு மலர்ந்த ஜீவியத்திற்காக "காணிக்கை பிரசாதம்" என்று எழுதப்பட்ட கட்டுரை xeroxக்குப் போன சமயம் அது.

* *அன்னை நம்மையும் நம் செயல்களையும் கவனிக்கிறார் என்று பகவான் கூறுவதை இந்நிகழ்ச்சி காட்டுகிறது.*
* *நம் நற்செயல்கள் அன்னையை மகிழ்விக்கும் என்பது அன்றுபோல் இன்றும் உண்மை*
* ***Sincerity** உண்மை தியானத்தைவிட உயர்ந்தது.*

❈ ❈ ❈





# இரண்டாம் உலகயுத்தம்

இங்கிலாந்திலிருந்து இளைஞர் ஒருவர் வந்தார். ஆசிரமத்தில் தங்கியிருந்தார். இடமும், சூழலும் பிடித்திருந்தது. இவருடைய தகப்பனார் யுத்தகாலத்தில் சென்னையில் ஒரு கம்பனி நடத்தினார். ஸ்ரீ அரவிந்தர் நூல்கள் இவரை ஆசிரமத்திற்கு அழைத்துவந்தன. முதலில் 1970இல் வந்தார். அப்பொழுது இவர் வாரம் ஒரு முறை வந்து என்னைச் சந்திப்பார். ஆர்வமான இளைஞர். ஆனால் ஆங்கிலேயர். 4,5 முறை என்னைச் சந்தித்த பின் தம் தகப்பனார் நடத்திய கம்பனியைப் பற்றிச் சொல்லி நான் கேள்விப்பட்டதுண்டா என்று கேட்டவர், நான் பதில் சொல்ல முடியாமல் தயங்குவதைப் பார்த்து "நீங்கள் கேள்விப்படவில்லை என்று தெரிகிறது" என்றார்.

இரண்டாம் மகாயுத்தத்திற்கு ஸ்ரீ அரவிந்தர் தம் யோக சக்தியை அனுப்பி, ஜெயித்ததைப் பற்றிப் படித்துள்ளார். "நீங்கள் அதை நம்புகிறீர்களா?" எனக் கேட்டார். நான் பதில் சொல்லுமுன் "உங்கள் தயக்கம், நீங்கள் நம்புவதைக் காட்டுகிறது" என்று கூறி மேலே பேசினார். 'எவ்வளவுதான் விபரம் தெரிந்தாலும் இந்தியர்களில் படித்தவர்களும் மூடநம்பிக்கையுடனிருக்கிறார்கள்' என்பது ஆன்மீக விவரம் தெரிந்த மேல் நாட்டாருடைய அபிப்பிராயம்.

சூட்சுமமானவற்றை நம்புவது மூடநம்பிக்கை என்பது இவர் போன்றவர் நினைப்பது, சந்திரனில் மனிதன் இறங்கினான் என்பதை நம்ப மறுக்கும் M.A. படித்த சமஸ்கிருத பண்டிதருக்கும் இந்த ஆங்கிலேயருக்கும் வித்தியாசமில்லை. இதில் உள்ள உண்மை பெரியது.

* *சூட்சும ஆன்மீகச் சக்திகள் செயல்படுவதை பல முறை கண்டாலும், அது உண்மை எனத் தெரிந்தாலும், அவற்றை நம்புவது மூடநம்பிக்கை என்பது பரவலான மேல் நாட்டுக் கருத்து.*

* அன்னை அருள் ஆயிரம் முறை செயல்பட்டுக் காரியம் நிறைவேறுவதைக் கண்ட அன்பர், அடுத்த முறை ஒரு காரியம் நடக்கவேண்டும் என்றால், அருளை நம்புவதில்லை. டாக்டரை நம்புவார், பணத்தை நம்புவார், பதவியை நம்புவார் என்பது நம் அன்றாட அனுபவம்.
* 100 சொற்பொழிவுகள் அருளைப்பற்றி நிகழ்த்தினாலும், அருள் மேல் நம்பிக்கை வருவதில்லை என்பதே ஆன்மீக உண்மை.

ஆங்கிலேயரிடம் நான் கூறாத விளக்கம், கூற விருப்பப்படாத விளக்கம் எளியது. எவ்வளவு பெரிய சண்டை, கலாட்டா, கலவரமானாலும், அது அன்பர் உள்ளத்தைத் தொடும் விஷயமானால் அன்பர் - ஸ்ரீ அரவிந்தரில்லை - அன்னையின் சாந்தியை அனுப்பினால், கலவரம் அடங்குவதைக் காணலாம். மனத்தைத் தொடுமளவுக்கு உணர்வு கலந்திருந்தால் தவறாமல் பலிக்கும்.

உள்ளூர் கலாட்டாவும், உலகயுத்தமும் ஒன்றா என்பது கேள்வி? ஆன்மீகரீதியாக ஒன்றே. எறும்புப் புற்றும், சூரியமண்டலமும் ஒன்று என்று பகவான் கூறுகிறார். உலகமகாயுத்தம் நமக்கு பயத்தை உண்டுபண்ணும். உணர்ச்சியைத் தொடாது. பகவான் உலகத்தை உள்ளத்தில் ஏற்றவர். அதனால் அவர் செய்தது பலித்தது.

நாமே சோதனை செய்து பலித்தபின் மனம் நம்புவதும் பெரிய காரியம். நாட்டின் எந்த பகுதியில் எப்படிப்பட்ட சண்டை நடந்தாலும், அதனால் பாதிக்கப்பட்ட அன்பர் பிரார்த்தனை செய்தால் அது 50வருஷம் சண்டையாக இருந்தாலும், நின்றுவிடும்.

❋ ❋ ❋





## 23, 24ஆம் பக்கங்களிலுள்ள சில கருத்துகள்

* வெண் கதிர்மேல் பரவி மறைந்த சூரியனைக் காணப் போனான்.
* பிரம்மத்தின் பிரதிநிதியாக வாழும் ஆன்மா
* வையகத்தைத் தாக்கும் எரிமலையான மனம்
* ஒளியின் பாதையில் வேட்டையாடும் மனஉறுதி
* சமுத்திரமே எழுந்து விடும் மூச்சு
* தெய்வத்தின் சுவடான செயல்கள்
* மரணப்பிடியிலுள்ள சிறு வாழ்வின் நாடகம்
* சச்சிதானந்தத்தின் விளையாட்டு அரங்கம்
* மாறுவேடம் புனைந்த மனிதன், மாயையான ரூபம்
* அழியாத அநித்தியத்தின் புரியாத புனைவேடம்
* காலத்தின் கதிக்குரிய யாத்திரீகன்
* கூடுவிட்டுக் கூடு பாயும் பிரயாணி
* புரியாத புதிர்களைத் தானே புனையும் தன்மை
* ஊமை விதையில் ஊன்றிய பிரபஞ்சம்
* நெளியும் புழுவில் மலரும் தெய்வம்
* ஆத்மா கட்டவிழ்ந்து பரமாத்மாவை நாடும்
* லோகமாதாவின் மார்பில் வளர்ந்தவன்
* உழைப்பு, நம்பிக்கை, போர், அமைதி என்ற வட்டம்
* மறைந்த சத்தியம், நழுவும் நித்தியம்

* என்றும் காணாத இலட்சியத்தின் அச்சு
* இறைவனின் பெருவெளியில் முரசுகொட்டி நுழைவோம்
* நீண்ட மங்கலான புனித யாத்திரை
* எழுவதும் வீழ்வதுமான எண்ணற்றச் சுழல்கள்
* சக்தியின் அசையாத ஒருமை
* நிலையற்ற உலகில் நிலையான நித்தியம்
* அவன் கண்ணால் பார்க்கும் அவள் கண்கள்
* அவன் முகத்தில் மலரும் அவள் முகம்
* உடலும், ஆன்மாவும் தம் முத்திரை பெற்றன
* பாதம்படாத மலை உச்சியை எட்டுவோம்
* எவரும் காணாத ஏதோ ஒன்றைத் தேடுதல்

❋ ❋ ❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

பகவான், அன்னை எழுதியவற்றை, சத்திய வாக்காக ஏற்பது யோகமாகும்.

*எழுத்தை ஏற்பது யோகமாகும்.*



**"Consultancy"**

## ஆடியோ சென்டர்

ஆடியோ சென்டர் என்பது கனடாவில் T.V. ரேடியோ போன்றவை விற்கும் கம்பனி. 80 கோடி ரூபாய் வியாபாரம் சரிந்து 50 கோடியாயிற்று. மார்க்கட் மாறுகிறது. தொழிலில் நாட்டில் 500 கம்பனிகளிருந்தன. இனி இத்தொழிலுக்கு எதிர்காலமில்லை என்ற நிலையில் தொழில் மந்தமாயிற்று. நாட்டிலிருந்த 500 கம்பனிகள் 300 ஆயின. மார்க்கட் மாறுவதால் எதுவும் செய்வதற்கில்லை. நாமாகக் கடையைமூட வேண்டாம். நடக்கிறது நடக்கட்டும் என்றவர் தொழிலைத் தொடர்ந்தனர். பணம் வசதியில்லாதவர்கட்கு இது இக்கட்டான நேரம். இந்த முதலாளியின் வியாபாரம் குறைவதால் பாங்க் தன் பணத்தைத் திருப்பிக் கேட்டது. அதைத் திருப்பிக் கொடுத்தால் கடையை மூட வேண்டும். June மாதம் 20ஆம் தேதி, பாங்க் அம்மாதம் 30 தேதிவரை வியாபாரத்தைப் பார்த்து முடிவு செய்வதாகக் கூறி 30ஆம் தேதிவரை விற்க வேண்டிய தொகையைக் குறிப்பிட்டது. சரியும் மார்க்கட்டில் அது எட்டாக்கனி. புதுவை அன்பர் அச்செய்தி கேட்டு கம்பனிக்காக 10 நாள் காலை 8 முதல் மாலை 8வரை பிரார்த்தனை செய்ததையும், கடை மூட வேண்டிய அவசியமில்லாமல் தப்பித்ததையும் நான் ஏற்கனவே எழுதியுள்ளேன். இது நடந்து 36 மாதமாகிறது.

ஒவ்வொரு மாதமும் 30ஆம் தேதி 31ஆம் தேதி, அன்று கண்டம். 20, 24, தேதிகளில் e-mail வரும், "நிலைமை படுமோசம்" என்று. "நம்பிக்கையுடன் பிரார்த்திக்க வேண்டும்" என பதில் அனுப்புவோம். 24 மாதம் தொடர்ந்த நெருக்கடி, புதுவை அன்பர் பொதுவாக அக்கரை கொண்டாரே தவிர முதலாளியைத் தாமே அன்னையை அனுப்பவேண்டும் என்று கூறுவதுடன் இருந்துவிட்டார். 24 மாதமும் நெருக்கடி உருவாகித் தப்பித்துக் கொள்வார். சென்ற செப்டம்பர் மாதம் முதலாளி சமாதிக்கு ஒரு நாள் வந்திருந்தார். புதுவை அன்பரைச் சந்தித்து நன்றி கூறினார். 4,5 மணி நேரம் பேசினார்கள். "நான் இதுவரை இதுபோல் உற்சாகப்பட்டதில்லை"

என்று மலர்ந்து திரும்பினார்.

அன்னை பக்தர் வேறொருவர் சென்ற நவம்பர் மாதம் ஆடியோ சென்டருக்குப் போனார். இவர் Management Consultant. முதலாளி, அன்னை அன்பரானாலும் மேல் நாட்டாருக்கு அன்னையை தொழிலில் சம்பந்தப்படுத்த கூச்சப்படுவார்கள். சென்ற அன்பர் அப்படிப்பட்டவர். இந்த முறை மனம் மாறி, "இந்த முதலாளியிடம் 8 ஆண்டுகளாக நண்பர்களாகப் பேசுகிறோம். இவர் எதையும் முறையாகச் செய்வதில்லை. எப்படிப் பலன் வரும்? இம்முறை அன்னையை அனுப்பச் சொல்கிறேன்" என்ற முடிவோடு இரண்டு வாரம் தங்கினார். அன்னையை அழைப்பது, சேல்ஸ்மேன், T.V., சரக்கு, வாடிக்கையாளர்கள் ஆக அனைத்துக்கும் எப்படி அனுப்புவது, கம்பனியில் என்ன system செய்வது எனச் சொன்னார். 15 நாளில் வியாபாரம் குறையவில்லை. முதலாளி என்ன பீஸ் கொடுப்பது எனக்கேட்டார். 10 நாள் வேலைக்கு $ 20,000 வழக்கமான பீஸ். "நண்பராக வந்தேன். அன்னையைப்பற்றி பேசியதால் பீஸ் வேண்டாம்" என்றார்.

முதலாளிக்குச் சென்ற ஆண்டில் இதேமாத சேல்ஸ்யை எட்டிப்பிடிக்க முடிவதில்லை. ஜனவரியில் சென்ற ஜனவரியைவிட 15% அதிகம் எனக் கொண்டாடினார். பிறகு 28% 35% 39% என ஒவ்வொரு மாதமும் வியாபாரம் பெருகியது. நேற்று "இந்த ஜூன் மாதம் சென்ற ஜூன் மாதத்தைப்போல் 100% அதிகம். அன்னையை நான் அழைக்க வேண்டியதேயில்லை. என் அருகில் பெரும்பாலும் நிற்பது தெரிகிறது" என்று e-mail வந்தது.

நான் அவருக்கு எழுதிய பதில், "அன்னையை அழைப்பது சிறந்தது. அதை நீங்கள் மேற்கொண்டு பலன் பெற்றது சந்தோஷம். அன்னை தருவது சக்தி energy, அதை systems மூலம் organise செய்தால் வரும் பலன் நிரந்தரமாக இருக்கும். மேலும் வளர முடியும்".

- *தொழில் பெருக அன்னையை அழைத்தால் பெரும் பலன் உண்டு.*
- *Systems, பெற்ற சக்தியை முழுவதும் பலனாக மாற்றித் தரும்*
- *வெறும் அழைப்புக்குக் குறைந்தபட்சப் பலன் வரும்.*

❋ ❋ ❋





# என் மாங்கல்யம் காத்த மகேஷ்வரி

அருள் அமுதம் வழங்கும் அன்னைக்கும் நமஸ்காரம்

நாங்கள் அன்னையைப் பற்றித் தெரிந்து கொண்டதே என் நாத்தனாரிடம் இருந்துதான். அப்பொழுது நாங்கள் புவனேஷ்வரில் இருந்தோம். யதேச்சையாக அவர்கள் ஸ்ரீ அரவிந்தர் பிறந்த இடம் பார்க்கவேண்டி கல்கத்தா வந்திருந்தார்கள். அந்தச் சமயம் பார்த்து எனக்கும், என் மகனுக்கும் சிறிய அம்மை வந்திருந்தது. அவர் சென்னை திரும்பும்போது அவரைப் பார்க்க என் கணவர் புவனேஷ்வர் ஸ்டேஷனுக்குப் போயிருந்தார். விவரம் தெரிந்து கொண்ட அவர், அவருக்கு மனதில் என்ன தோன்றியதோ உடனே வண்டியை விட்டு இறங்கிவிட்டார். சென்னைப் பயணத்தை தொடரவில்லை. வீட்டுக்கு வந்த அவர் தம்மிடமிருந்த அன்னை, ஸ்ரீ அரவிந்தர் போட்டோவை எங்கள் பூஜை அறையில் வைத்துவிட்டார். எங்கள் பக்கத்திலிருந்து கொண்டு தியானம் செய்வதும், எங்களைக் கவனித்து கொள்வதுமாகவே இருந்தார். இத்தனைக்கும் அப்போது அவருக்கு உடம்புகூட நல்ல நிலையில் இருக்கவில்லை. அன்னைதான் அவருக்கு ஓர் அபாரத்தெம்பை கொடுத்தார். எனது மாமியார் கூட என்னைப் பார்த்துப் பயந்துவிட்டார். எனது உடம்பு சரியான நிலையில் என்னைப் பார்த்த டாக்டருக்கு ஒரே அதிசயம், ஏனென்றால், எனக்கு இருந்த நிலைமைக்கு ஒன்று கண் பார்வை போயிருக்கலாம், இல்லை புத்தி ஸ்வாதீனமில்லாமல் போயிருக்கலாம். அந்த அன்னைதான் இப்போது என்னை இந்த நிலையில் வைத்திருக்கிறார்கள்.

நன்றாக நடந்து கொண்டிருந்த என் கணவரின் அலுவலகத்தில், திடீர் என்று ஸ்டிரைக் ஆரம்பித்துவிட்டது. என் கணவரையும், அவர் சக உத்தியோகஸ்தரையும் வலுக்கட்டாயமாக ரூமில் அடைத்து வைத்து விட்டார்கள். ஊழியர்கள் போதை நிலையில் இருந்தார்கள். அவரை

அடிக்க திட்டம் தீட்டியிருந்தார்கள். என் கணவர் எப்போதும் வீடு வர தாமதமானால் போன் செய்து விடுவார். அன்று இரவு 8.45 ஆகியும் போனே வரவில்லை. அவரும் வரவில்லை. நான் prayar முடித்து, office-க்கு phone செய்து பார்க்கலாம் என்று செய்தால் ஒரு கடைநிலை ஊழியர் என்று சொல்லிக்கொண்டு போனை எடுத்தவர் ஒருவர், "சார் முக்கியமான வேலையில் இருக்கார், இப்பொழுது உங்களிடம் பேசமாட்டார்" என்றான். ஆனால் phone-ஐ எடுத்தது கடைநிலை ஊழியர் இல்லை என்பது எனக்கு தெரிந்துவிட்டது. ஏனென்றால் அவனுக்கு English தெரியாது. அங்கு நடந்து கொண்டிருந்த விஷயமே வேறு. அவன் டெலிபோன் ரிசீவரை மீண்டும் போன் மேல் வைப்பதற்குப் பதிலாக, டேபிள் மேலேயே வைத்து விட்டான். நானும் தொலைபேசியை disconnect செய்யாததினால் அங்கு அவர்கள் பேசிக் கொண்டிருந்ததை எல்லாம் நன்றாகத் தெரிந்து கொண்டு விட்டேன். "ஐயோ! மதர் இவர் ஏதோ ஆபத்தில் இருக்கார், நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும்" என்று வேண்டிக்கொண்டு உடனே இவர் advocate-க்குப் போன் செய்து வேண்டிய action எடுக்கச் சொன்னேன். அவர் உடனே இரண்டு பேரையும் போலீசையும் அழைத்து வந்து இவரைக் காப்பாற்றினார். அன்று இவர் பிழைத்ததே அன்னையின் அருளால்தான். உடனே என் கணவர் இங்கே சென்னையிலிருக்கும் தன் தம்பிக்குப் போன் செய்து, பாண்டிக்கு தகவல் கொடுக்கவே, அவரும் உடனே அன்னையின் அருளும் பாதுகாப்பும் எங்களுக்குக் கிடைக்கும்வகையில் ஒரு telex message அனுப்பினார். அன்னையின் பிரசாதப் பாக்கெட்டும் அனுப்பினார். அடுத்து வந்த இரண்டு மாத strike period-இயிலும் இவர் தனியாகப் பாதுகாப்பிற்கு ஒருவரும் இல்லாமல், ஆபீஸுக்குத் தனியாகவே போய் வந்தார். Mother கூடவே இருந்ததனால் இவரையோ, இவர் காரையோ ஒருவராலும் ஒன்றும் செய்ய முடியவில்லை. அந்தச் சமயத்தில் எங்கள் கஷ்டத்தில் எங்களுக்காகப் பிரார்த்தனை செய்த எல்லோருக்கும் நாங்கள் கடமைபட்டிருக்கிறோம். ஸ்ரீ அரவிந்தரும், அன்னையும் மானஸீகமாக



எங்களுடனேயே இருந்தார்கள். அன்னையிடம் முறையிட்டபோதெல்லாம் எங்கள் குரலுக்குச் செவி சாய்த்திருக்கிறார்கள்.

என் மகள் இன்று நன்றாக இருக்கிறாள் என்றால், அது அன்னை கொடுத்த மறுவாழ்வுதான். நாங்கள் புதுவருடப்பிறப்புத் தரிசனம் முடித்து வந்த அடுத்த நாள், திடீர் என்று நடு இரவு 1.30 அளவில் என் மகளுக்கு ஜுரம் வந்து 106-107 என்று ஏற ஆரம்பித்துவிட்டது. வீட்டிலும் யாரும் இல்லை. என் கணவர் வேலை விஷயமாக வெளியூர் சென்றிருந்தார். போனும் கிடையாது. "அன்னையே உங்களைத் தவிர எனக்கு வேறு வழியில்லை. நீங்கள்தான் என் மகளைக் காப்பாற்ற வேண்டும்'' என்று பிரார்த்தனை செய்து கூடவே நான் கொண்டு வந்திருந்த ஸமாதிப் பூவை டவலில் வைத்து, அவள் தலைக்கு அடியில் வைத்து, "மதர், மதர்'' என்று அழைக்கும்படி என் மகளிடம் சொன்னேன். அரைமணிநேரத்தில் ஜுரம் கம்மியாகி விட்டது. பிறகு 4,-5 நாள் ஜுரம் வந்து போய் கொண்டேயிருந்தது. பிறகு அன்னையின் உத்தவுரப்படி மதரிடம் சரணாகதி அடைந்து ஸமாதிமுன் மானஸிகமாக இருந்தபடி தியானம் செய்ததில், என் மகள் பூரண குணமடைந்தாள்.

அன்னையின் அருளினால்தான் என் மகனுக்கும் பல கஷ்டங்களுக்குப் பிறகு நல்ல காலேஜில் அட்மிஷன் கிடைத்தது.

எப்போதும் அன்னையின் அருள் எங்கள் குடும்பத்தில் எல்லோருக்கும் நிரந்தரமாக இருக்கவேண்டும் என்று பிரார்த்தனை செய்துகொண்டு என் கட்டுரையை முடித்து கொள்கிறேன்.

- கிரிஜா மணி

❋ ❋ ❋

# ஜடமும், ஆன்மாவும் ஒன்றே

## P-6 Spirit is Matter, Matter is Spirit

* முதலாளியும், தொழிலாளியும் கம்பனிக்கு அவசியமான இரு அங்கங்கள்.

முதலும், தொழிலும் ஒன்றே.

* தலைவனும், தொண்டனும் கட்சிக்கும், நாட்டுக்கும் தேவையானவை.

தொண்டனே தலைவனானான்.

தொண்டனுடைய மனப்பான்மையே ஒருவனைத் தலைவனாக்கும்.

தலைமையும், தொண்டும் ஒன்றே.

* ஆசிரியரும், மாணவரும் கல்வி என்ற அரங்கத்தின் இரு சமமான பகுதிகள்.

கல்வி புகட்டும் ஆசிரியருக்கு போதிப்பதால் அறிவு நிறைவடைகிறது.

மாணவன் பாடத்தைக் கற்கிறான்.

ஆசிரியர் கற்பிப்பதைக் கற்கிறார்.

கல்வி இறைவனாகும்.

இறைவன் என்ற பிரம்மத்தின் முன் சமமாக இருந்து ஆசிரியரும், மாணவனும் கற்க வேண்டும் என்பது பிரபலமான ஸ்லோகம்.

* கணவனும், மனைவியும், ஒன்றே எனக் கருதினால் இல்லறம் நல்லறமாகும்.

கணவனும், மனைவியும் குடும்பத்தின் இரு பகுதிகள்.



உலகமே ஆண் பெண் என்ற தத்துவங்களால் செயல்படுகிறது.

குடும்பத்தில் மனைவி கணவனுக்கு அடங்குகிறாள்.

ஆன்மீகத்தில் ஈஸ்வரன் சக்திக்குச் சரணடைவதால் பூர்த்தியாகிறான்.

* சம்பாதிப்பவனும், செலவு செய்பவனும் ஒன்றே.

செலவு செய்வதால் சம்பாதிக்க முடிகிறது.

செலவாகாவிட்டால், சம்பாத்தியம் நிற்கும்.

ஏரியிலிருந்து நீர் வெளியே போகாவிட்டால், உள்ளே வரும் நீர் ஏரியை உடைக்கும்.

செலவும், வரவும் ஒன்றே.

* **Positive. negative** என்பவையும் ஒன்றே.

இராணுவமும், சர்க்காரும் ஒன்றே.

நன்மையும், தீமையும் ஒன்றே.

நன்மையிலிருந்து தீமை எழுகிறது.

தீமையிலிருந்து நன்மை எழுகிறது.

வாழ்வுக்கு நன்மை, தீமை இரண்டும் தேவை.

ஆன்மாவுக்குச் சலனமும், அமைதியும் தேவை.

* பயிரும், கரம்பும் ஒன்றே

* பள்ளி நடப்பதும், விடுமுறையும் ஒன்றே.

கரம்பாக இருந்தால்தான் அடுத்த பயிர்விளையும்.

விடுமுறையில்தான் மாணவனுடைய அறிவு பக்குவப்படுகிறது.

❋ ❋ ❋

# மொழிபெயர்ப்பு

**ஸ்ரீ அரவிந்தர் பன்மொழிப் புலவர். அவர் பல மொழிகளிலி ருந்து நூல்களை மொழிபெயர்த்துள்ளார். அவை,**

1) பிரெஞ்சு மொழியிலிருந்து அன்னை எழுதிய “தியானமும், பிரார்த்தனையும்” என்ற நூலின் பகுதியை மொழிபெயத்துள்ளார்.

2) சமஸ்கிருதம்

   இராமாயணத்திலிருந்து தசரதனுடைய பேச்சு, ஆரியநகரம், தாயின்புலம்பல், மனைவிபோன்றவற்றை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்.

   மகாபாரதத்திலிருந்து விராடபர்வம், உத்யோக பர்வம், பகவத்கீதை ஆகியவற்றை மொழி பெயர்த்தார்.

   காளிதாஸனுடைய விக்ரம ஊர்வசி

   பர்த் ஹரியின் நூல்கள்

3) வங்காளி

   பங்கிம் சந்திர சட்டர்ஜியின் ‘வந்தே மாதரம்’, ‘ஆனந்த மடம்’, வைஷ்ணவப் பாசுரங்கள், 14 சாதகர்களுடைய செய்யுள், கட்டுரைகளை ஆங்கிலத்தில் எழுதினார்.

4) லத்தீன், கிரேக்க மொழி

   ஹோமர், வர்ஜில் ஆகிய கவிகளுடைய காவியங்களைச் சுமார் 10 பக்கங்களில் எழுதினார்.

5) தமிழ்

   ஆண்டாள், நம்மாழ்வார், குலசேகர ஆழ்வார், திருக்குறள் ஆகியவற்றிலிருந்து சுமார் 20 பக்க அளவுக்குச் செய்யுள்,



குறள், பாசுரம் ஆகியவற்றை ஆங்கிலப்படுத்தியுள்ளார். இவற்றைப் பாரதியின் துணை கொண்டு செய்ததாகக் கேள்விப்பட்டுள்ளேன்.

உலகப்பெருங்கவிகளுள் நம்மாழ்வாரை வைத்து பகவான் எழுதியுள்ளார்.

ஆண்டாள்

வாரணமாயிரம் சூழவலம் வந்து.... கனாக் கண்டேன் தோழி நான் என்ற வரிசையில் 4 பாசுரங்களை மொழி பெயர்த்துள்ளார். அவற்றுள் ஒன்று.

I dreamed a dream, O friend.
The wedding was fixed for the marrow. And, He, the lion Madhav,
the young Bull whom they call the master of radiances.
He came into the hall of wedding decorated with luxuswis palins.

நாளை வதுவை மணமென்று நாளிட்டு
பாளைக் கமுகு பரிசுடைப் பந்தர்க் கீழ்
கோளரி மாதவன் கோவிந்தன் என்பான் ஓர்
காளைப் புகுதக் கனாக் கண்டேன் தோழி நான்.

திருவள்ளுவர்

அகரமுதல எழுத்தெல்லாம் ஆதிபகவான்
முதற்றேயுலகு. -- என்பதன் மொழிபெயர்ப்பு

Alpha of all letters the first
Of the worlde the original God head the begining

பாயிரத்தில் 10 குறள்களும், வான்சிறப்பு என்ற அதிகாரத்தில் 5 குறள்களும் அவரால் மொழிபெயர்க்கப்பட்டன. தமிழின் பாங்கு ஆங்கில மொழிபெயர்ப்புக்கு இசையவில்லை என்கிறார்.

❊ ❊ ❊

**Vol I p.79. The descending Supermind can be known only by those who have the Supramental Consciousness**

**சத்திய ஜீவியம் புவியில் இறங்குவதை ஏற்கனவே சத்தியஜீவியத்தை ஓரளவு பெற்றவர்களாலேயே உணரமுடியும்.**

இறைவன் என்பது சச்சிதானந்தத்தைக் கடந்த பிரம்மம். நிர்விகல்பசமாதியில் இதை ரிஷிகள் அடைந்துள்ளனர். மனம் என்னும் கருவியால் இதை எட்டும்பொழுது இது க்ஷர பிரம்மமாகவோ, அக்ஷர பிரம்மாகவோ தெரியும். பக்தியால் அணுகினால், புருஷனாகவோ, புருஷோத்தமனாகவோ காட்சியளிக்கும். ஸ்ரீ அரவிந்தர் விவேகாநந்தர் காண்பித்த சத்தியஜீவியத்தை எட்டினார். அத்துடன் அது புவியில் வந்து மனிதனைத் தெய்வமாக்கும் எனவும் அறிந்தார். அவருடைய யோக முயற்சியால் 1956இல் அச்சக்தியை புவிக்குக் கொணர்ந்தார். இந்த யோகத்தை மேற்கொண்டவர்க்கு அல்லது பிறவியில் அம்சம் உள்ளவர்க்கு சத்தியஜீவியம் சிறிது இருக்கலாம். அப்படியுள்ளவர் 1956இல் வந்த சத்தியஜீவியத்தை அறிவர். அப்படி 3 பேர் உலகில் உணர்ந்தனர் என்றார் அன்னை.

இன்றுவரை சத்திய ஜீவியசக்தி உலகில் வந்துள்ளதை நம்மால் உணரமுடியவில்லை. 4 ஆண்டுக்கு ஒருமுறை **Feb.** 29இல் அதன் நிறைவு விழா வரும்பொழுதும் நமக்கு அது தெரியவில்லை எனில், நம்முள் அச்சக்தி சிறிதுமில்லை என்று பொருள்.

பெரிய பாடகர் கச்சேரி செய்தால் பாட்டுத் தெரிந்தவர்களாலேயே அதை ரசிக்க முடியும். தெரியாதவர்க்கு ஏதோ பாடுகிறார் எனத் தெரியும். நாம் வெளிநாட்டுக்குப் போனால், அவர்கள் கேலியாகப் பேசும் நேரம்



அனைவரும் சிரித்தால், நமக்கு அந்த ஹாஸ்யம் புரியாது. சிரிப்பு வாராது. அவர்கள் ஊர் விஷயம் தெரிந்தவர்க்குத்தான் அது புரியும்.

கிரிக்கெட் என்ற விளையாட்டை முதன் முறையாகப் பார்ப்பவர்க்கு எதுவும் தெரியாது. எல்லோரும் ஆரவாரம் செய்வது ஏன் என விளங்காது.

நமக்கு சத்திய ஜீவியத்தால் வரும் பலன் தெரியும். சத்திய ஜீவியம் தெரியாது. பார்லிமெண்ட்டில் காரசாரமான விவாதம் படிக்காதவனுக்குப் புரியாது. அதன் முடிவாக அவன் பெறும் பலன் விளங்கும்.

நம் நாட்டுக் கோயில்களில் உள்ள சிற்பங்களை வெளிநாட்டார் கண்டு வியந்து, ரசிப்பதுபோல் நம்மால் உணர முடியவில்லை. அது நம் நாட்டுச் சிறப்பு என்றாலும், கலை, சிற்பம் ஆகியவற்றில் அனுபவம் உள்ளவர்களுக்கே அது புரியும்.

எந்தத் திறமை, பக்குவம் ஒருவரிடம் உள்ளதோ, அதை அவர் பிறரிடம் கண்டால் ரசிக்க முடியும். எதை ரசிக்கிறாரோ, அது அவரிடம் இருக்கும். நம்மால் ஒரு இலட்சியத்தை ஏற்றுப் பாராட்ட முடியுமானால், நாம் அதுவாக ஆகலாம் என்ற கீதையின் வாக்கில் உள்ள தத்துவம் இது.

***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

புரியாதவரையில் மனிதனுக்குப் பிரச்சினையுண்டு. புரிந்தால் பிரச்சினையிருப்பதில்லை. புரியாதவரையில் பிரச்சினையாக இருந்தது, புரிந்தவுடன் பிரச்சினையாக இருப்பதில்லை. பார்வை மாறினால் பிரச்சினை கரைகிறது.

*மாறிய பார்வை, கரையும் பிரச்சினை.*

## குறுகிய கண்ணோட்டம் - நம் சுயநலத்தை வலி யுறுத்துகிறது - அன்னையை விலக்குகிறது

## பரந்த கண்ணோட்டம் - நம் பர்சனாலிட்டியை விரிவடையச் செய்கிறது - அன்னையை நெருங்கவைக்கிறது

*(சென்னை-பெரம்பூர் ரிஷி இல்லம் தியான மையத்தில் 25.04.99 அன்று திருமதி உஷா ராமதாஸ் நிகழ்த்திய உரை)*

உலகம் முன்னேறும்பொழுது நாமும் முன்னேற விரும்புகிறோம். நம் முன்னேற்றத்திற்குத் துணை செய்வன பல. அவற்றுள் முக்கியமானது கண்ணோட்டம். முன்னேற்றத்தின் ஆரம்பம் வசதி. நிம்மதி, சந்தோஷம், பிரபலம், செல்வம், செல்வாக்கு, பதவி ஆகியவை முன்னேற்றத்தின் சமூக நிலைகள். அறிவு, ஞானம், நிதானம், பொறுமை, ஆத்ம ஞானம், ஆத்மானுபவம், சித்தி ஆகியவை முன்னேற்றத்தின் முடிவான பகுதிகள்.

மனிதன் பெறும் ஆன்மீகச் சித்திகள் மௌனம், சக்தி, ஞானம், மோட்சம், ஆனந்தம் ஆகியவை. முடிவாக மனிதன் பெறும் ஆன்மீகச் சித்தியை முதலிலேயே அவனுடைய முயற்சியின்றி வரமாக அளிக்க அன்னை அவதாரம் எடுத்தார். அதை நாம் பெற நம்மிடம் அன்னை எதிர்பார்ப்பது சரணாகதி. நம்பிக்கையிருந்தால் சரணாகதி எழும். சரணாகதியை நாடுபவன் யோகம் செய்யும் சாதகன்.

குடும்பவாழ்விலுள்ள பக்தன் விரும்புவது அன்னையை நெருங்கி வந்து, குடும்பக்கடமைகளைச் சிறப்பாகப் பூர்த்தி செய்து மனநிம்மதியுடன் சந்தோஷமாகச் சீரும் சிறப்புமாக நல்ல முறையில் வாழ விரும்புகிறான். அதற்கு எளிய இலட்சியங்களான பரந்த



கண்ணோட்டம் உதவும். பரந்த கண்ணோட்டம் வர, குறுகிய கண்ணோட்டத்தைக் கைவிடவேண்டும்.

நாம் சுயநலத்தை அறிவோம். அது உயர்ந்ததில்லை எனவும் அறிவோம். ஆனால் சுயநலமானவன் நல்ல வழி, தவறான வழிகளில் திறமையாகச் செல்வாக்காக வாழ்கிறான். அவன் அன்னைக்கு பிரார்த்தனை செய்தால் பலிக்கிறது. நமக்குப் பலிக்காதவை அவனுக்குப் பலிக்கிறது. இது மனதில் ஒரு கேள்வியை எழும்புகிறது. “நாம் சுயநலமில்லாமலிருப்பது தவறா?” என்ற கேள்வி எழுகிறது. பதில்,

* சுயநலம் சரியில்லை.
* நாம் சுயநலமாக இல்லாமலிருப்பது தவறில்லை.
* சுயநலமி, திறமைசாலியாக இருப்பதால், அவன் திறமைக்குச் செல்வமும், அருளும் கிடைக்கின்றன.
* நாம் சுயநலமாக இல்லாவிட்டாலும் திறமையின்றி இருப்பதால், செல்வம் பெருகுவதில்லை. பிரார்த்தனை பலிப்பதில்லை.
* சுயநலத்தை மீறிய திறமை பலிப்பது சரியாகும். திறமைக்குரிய அளவு அருள் அதிகம்.

மனிதன், நல்லவன், படித்தவன், உயர்ந்தவன் என நாம் அறியும் அனைவருக்கும் அடிப்படையான மனநிலை ஒன்றுண்டு. அது;

* நான் சரி, பிறர் தவறு.
* நான் முழுவதும் சரி, பிறர் அனைவரும் தவறு.

இது நம்ப முடியாதது. பெரிய படிப்பு, பெரிய உத்தியோகம், பெரிய அந்தஸ்திலுள்ளவர் அன்னைச் சேவையில் நெடுநாளிருந்து ஆயிரம் பேருக்கு அறிவுரை கூறினார். அவருக்கு அன்னை ஒரு முறையும் பலிக்கவில்லை. ஏன் பலிக்கவில்லை என அவருக்குத் தோன்றவில்லை. பிறருக்குக் கெட்ட செய்தி வந்தால் வாய்விட்டுச் சிரிப்பார், மனம் புளகாங்கிதமடையும். இது தவறு என அவர் அறியவில்லை. இவர் யாருடன் நெருங்கிய தொடர்பு கொண்டாலும்,

அவர் தொழில் நசிக்கும், அவர் வீட்டில் தொந்தரவு வரும், சாவும் நேரும். இவையெல்லாம் அவர் கண்ணில் பட்டாலும், மனதில் படவில்லை. தன்னை, அவர், ‘‘எனக்கு அபரிமிதமான நல்லெண்ணமுண்டு” என விவரிக்கிறார். நமக்கு அவரைப் பற்றிக் கவலையில்லை. நம்மை இக்கண்ணோட்டத்தில் பரிசீலனை செய்து பார்த்தால்,

* *பிரார்த்தனை பலிக்காத இடத்தில் அவநம்பிக்கையிருக்கும்.*
* *பிறர் நம்மைத் திட்டும்பொழுது, நம் மனம் அவர் மீது கெட்ட எண்ணம் கொண்டிருக்கும். அக்கெட்ட எண்ணமே பிறர் வசவாக வருகிறது.*
* *படபடப்பு வரும்பொழுது, அறியாமை செயல்படும். சிலசமயங்களில் பேராசை முன்வந்து நிற்கும்.*
* *அனைவரும் நம் மீது தவறான அபிப்பிராயம் சொல்லும் பொழுது மனம் கர்வமாக இருக்கும்.*
* *காரியம் கெடும்பொழுது போட்டி மனப்பான்மை எழும்.*
* *வந்த வாய்ப்புத் தவறும் பொழுது பிறர் மீது பொறாமை எழும். "நான்“ எழுந்து சாதித்துக் காட்டுவேன் என நினைக்கும்*
* *சும்மாயிருக்கும்பொழுது நம் பெருமையை மனம் நினைந்து வியக்கும்.*

இவை அனைத்தும் குறுகியக் கண்ணோட்டங்கள். பரந்த கண்ணோட்டம் எழ முதலில் குறுகியவை விலக வேண்டும். அது அன்னையை விட்டு நம்மை விலக்குகிறது என அறிய வேண்டும். அன்னையை நெருங்க நாம் குறுகியவற்றை விலக்கி, பரந்த மனநிலையை ஏற்கவேண்டும் என்று தெளிவு பெறுவது அன்னை ஞானம்.

பரந்த கண்ணோட்டம் எது என அறிந்தால் அதைப் பின்பற்றலாம். நமக்காகச் செயல்படுவதைவிட பிறருக்காக, ஊருக்காக, உலகத்திற்காக, தெய்வத்திற்காகச் செயல்படுவது



உயர்ந்தது. தெய்வத்திற்காகச் செயல்படுவதைவிட தெய்வத்தை நம்புவது நல்லது. அதனினும் உயர்ந்தது தெய்வத்திடம் சரணாகதி அடைவது. பிரார்த்தனை பலிக்க வேண்டும் என்று நினைப்பதைவிட இதன் மூலம் அன்னையை நான் அதிகமாக நம்ப விரும்புகிறேன் என்ற நினைவு சிறப்பு.

கம்பனிக்குச் சிரமம் வந்துவிட்டது. கோபுரம் சரிந்தது. எதிரே வர பயப்படுபவர்கள் இன்று எழுந்து நின்று வாய்க்கு வந்தபடிப் பேசுகிறார்கள். அந்த நிலையில் பலபேரும் “அன்னையிடம் போவது நல்லது” என்றனர். அப்பொழுதுதான் தம் 5ஆம் வயதில் அன்னையைத் தரிசித்தது நினைவு வந்தது. சரி என மனம் ஏற்று பிரார்த்தனை செய்தபொழுது தெம்பு வந்தது. பல நல்ல காரியங்கள் சிறு அளவில் பலித்தன. திடீரென பாங்க் இன்ஸ்பெக்ஷனுக்கு வருவதாகவும், கடுமையான ஆபீசர் தலைமையில் வருவதாகவும் செய்தி. மனம் தளர்ந்தது. அருகிலிருந்த அன்பர், “பயப்படக்கூடாது. நல்லது மட்டுமே நடக்கும். நாம் செய்வதைச் செய்வோம். அன்னையை முதலில் கம்பனிக்கு அனுப்புங்கள்'' என்றார். அப்படியே செய்துவிட்டு பதட்டத்துடனிருந்தார். மாலையில் கம்பனியிலிருந்து செய்தி வந்தது. “அந்தக் கடுமையான ஆபீசர் வரவில்லை. வந்தவர்கள், கம்பனி, ஆபீஸ், ரிக்கார்ட்களைப் பார்த்து ஆச்சரியப்பட்டு, “இதைவிட நல்லமுறையில் எப்படி நடத்துவது? என்மனம் மாறியது. உங்களுக்கு என்ன வேண்டுமோ அதை பாங்க் தர நான் சிபார்சு செய்கிறேன்” என்றார்.

கஷ்டம் விலகியது என்பதைவிட அன்னையை நம்புவது மிகப் பரந்த கண்ணோட்டம். அது நம்மை அன்னையிடம் நெருக்கமாகக் கொண்டு வருகிறது எனப் புரியலாம்.

சுமார் 25 ஆண்டுகள் அன்னை சேவையிலிருந்து அதிகபட்சத் தவறுகளை ஆர்வமாகச் செய்துவிட்டு தினமும் சமாதிக்குப் போகின்றவர் வாழ்வில் சிரமம் படிப்படியாக அதிகரித்தது. தன்னை உயர்ந்த பக்தன் என நினைப்பதைவிட தம்மிடம் உள்ள தவற்றைக் காண வேண்டும் என அவர் நினைத்த நேரம் ரோட்டில் போகும்

20 எருமை மாடுகளில் ஒன்று அவரை வாலால் சுருட்டி அடித்தது. மாடு ஓட்டுபவனை, "பார்த்து ஓட்டக்கூடாதா?" என்று கூறிவிட்டு வீட்டுக்கு வந்தார். வந்தவுடன் கரண்ட் போய்விட்டது. ரோட்டில் மாடு வாலால் அடிக்கிறது. வீட்டில் கரண்ட் போகிறது என்றால் என் மேல்தான் தவறா? எனக் கேட்டவர், "சரி மாட்டுக்காரனைப் பேசியது தவறு எனக் கொண்டு மனதால் அவனிடம் மன்னிப்புக் கேட்கிறேன்" என்றார். கரண்ட் வந்துவிட்டது. விஷயம் கரண்டில் இல்லை, எருமை மாடில்லை.

* *தன் தவற்றை உணர்வது பரந்த கண்ணோட்டம்.*
* *அது நம்மை அன்னையிடம் நெருங்க வைக்கும்.*
* *மனம் மாறிய நேரம் அன்னை நம்மிடம் வருவதை, கரண்ட் காட்டுகிறது. தினமும் சமாதிக்குப் போய்க் காணாத அன்னை மனம் மாறிய நேரம் நம்மைத் தேடி வருகிறார்.*

❋ ❋ ❋

### ஸ்ரீ அரவிந்த சுடர்

வாழ்வு ஆசையாலானது. சிறு ஆசை, மனிதனை உத்வேகப்படுத்துகிறது. நாம் சும்மா இருந்தால், ஆழ்மனம் தன் சிறு ஆசைகளில் தீவிரமாக உழல்கிறது.

*மனத்தின் ஆழம் ஆசையை ஆழ்ந்து அனுபவிக்கும்.*





## பிரார்த்தனை பலிக்கவேண்டும்

அண்ணன் - 18 வால்யூம்களில் அன்னை பேசியவை வெளி வந்துள்ளன. அன்னை நூற்றாண்டு, 1978க்கு முன் இவையில்லை. இந்நூலை வாங்குபவர் குறைவு. வாங்கினாலும் படிப்பவர் குறைவு. இந்தியாவில் எந்த ஆசிரமப் பரம்பரைக்குமில்லாத வசதி, பாக்கியம், நமக்கிருக்கிறது. அனுபவிப்பவர் எத்தனை பேர்?

தம்பி - படிப்பவர்களில் எத்தனை பேர் நுணுக்கத்தை அறிகின்றனர்? ஏற்கனவே தமிழில் புத்தகங்களில்லை. இப்பொழுது பல வந்துள்ளன. படிப்பவர் குறைவு. வாழ்வில் அடிப்படை மாற்றம் வாராமல் அன்னை நம்மிடம் நிரந்தரமாகத் தங்க மாட்டார்.

அண்ணன் - சாதாரண மக்களுக்குப் புத்தகம் பயன்படாது. ஒரு குடும்பம், ஒரு நண்பர் குழாம் இதுபோல் ஜீவனோடிருந்தால் அதைப் பார்த்துத் தெரிந்து கொள்வார்கள். அதுபோன்ற Mothers Family அன்னை குடும்பமில்லையே. படித்தவர்களே, படித்துப் புரிந்துகொள்வதைவிட, பார்த்துப் புரிந்து கொள்வது அதிகம். ஆசிரமத்தில் அப்பழக்கங்களை நம்மவர்கள் காண்பதில்லை. சொஸைட்டிக்கு வருபவர்கட்கும் கண்ணில் நல்ல பழக்கங்கள் படுவதில்லை. மனிதர்கள் அன்பர்களாக அன்பாயிருப்பதைவிட வக்ரமாக, கர்வமாகப் பாராமுகமாக, எப்படியெல்லாம் இருக்கக் கூடாதோ அப்படியெல்லாம் பழகுகிறார்கள். சண்டை போடுகிறார்கள். பொருள்கள் திருடு போகிறது. பொறுப்பில்லாமலிருக்கிறார்கள். வருபவர்கள்

இவற்றையே காண்பதால், அன்னையின் சிறப்பை அறிய வழியில்லை.

தம்பி – ஆபீசிலிருப்பவர்களை கண்டித்தும் இது நடக்காது. சம்பளம் வாங்குபவர்கள் கணக்கில் சேரமாட்டார்கள். அன்பர்களைக் கண்டிக்கக் கூடாது. அப்புறம் என் செய்வது? இந்த நிலையில் சமூகத்தின் பழக்கங்கள் வந்து விடுகின்றன. பணக்காரன் முக்யமாகிவிடுகிறான். அது நமக்கு உதவாது.

பணக்காரன் முக்யமானால், அன்னை அங்கில்லை.

அண்ணன் – அது மட்டுமன்று. நம் சமூக வாழ்வுக்குரிய குறைகள் ஏராளம். அவை அன்பர்களிடம் வரக்கூடாது. நம்மிடையேயுள்ள நல்லன ஏராளம். அதுவே அன்னைக்கு ஒத்து வாராது. பின் எதுதான் ஒத்து வரும்? எப்படிச் சாதாரண மக்கள் புரிந்து கொள்வார்கள்! படித்துப் புரிந்து கொள்ளலாம். அதைப் பலரும் செய்வதில்லை.

படிப்பாலும் பல விஷயங்கள் புரிவதில்லை. பார்த்துப் புரிந்து கொள்ள உதாரணமில்லை. நம் வீட்டைப் பார்த்து யாராவது இது அன்பர்கள் வீடு என்பார்களா? படங்கள்தானிருக்கின்றன. வேறெந்த அன்னைக்குரிய சுவடு இங்குள்ளன?

இனிமையான சொல், நல்லெண்ணம் நிறைந்த செயல் நம் வீட்டில் காணமுடியுமா?

தம்பி – பல விஷயங்களை நாம் பொருட்படுத்துவதில்லை. தவறவிட்டு விடுகிறோம். அதில் Mother's Joy அன்னையின் ஆனந்தம் ஒன்று. வருத்தமாக இருக்கும் பொழுது அன்னையை அழைத்தால் வருத்தம் குறைந்து மறைகிறது. அதுவே போதும் என்றிருந்து விடுகிறோம்.



அண்ணன் – Mother's Joy என்பது அதில்லையே. அது வருத்தத்திற்கு எதிரான சந்தோஷம், மனிதனுக்குரியது. அன்னைக்குரியதன்று. வருத்தம் போனபின், வருத்தம் திருவுருமாறி சந்தோஷமாவதே Mother's Joy அன்றோ?

தம்பி – நானும் அதைத்தான் சொல்ல விரும்புகிறேன். நாம் வருத்தம் வரும்பொழுது அது போனால் போதும் என நினைக்கிறோம். தொடர்வதில்லை. எல்லாப் பக்தர்களும் அதை அனுபவித்துள்ளார்கள். அதுதான் இது என அறிவதில்லை. விபரமும் தெரிவதில்லை. பொருட் படுத்துவதுமில்லை.

அண்ணன் – நம் வீட்டில் அன்னை அறையில் சூழலைப் பார்த்தவர் எத்தனை பேர் அதைப் பாராட்டியுள்ளனர்? அதுபோலி ருந்தால் தியானம் நன்றாக இருக்கிறது என்றுதான் நான் நினைப்பது வழக்கம். ஒரு புண்ணியாத்மாவால் எனக்கு அந்த ஞானம் ஏற்பட்டது. நான் என் பிறந்த நாளைக்கு அன்னையைப் பார்க்கச் சென்றால் கூடவே எதிர் வீட்டு மாமா அந்த நாளில் வருவார். அது தரிசனமாக இருக்காது. சப் என்றிருக்கும். சில சமயங்களில் தொந்தரவும் வரும். அவர் பெரியவர் என்பதால் உதறவில்லை.

தம்பி – உங்களுக்கு ஒரு மாமா. மையம் நடத்துபவருக்குப் பல நண்பர்கள். தரிசனம், தரிசனமாக இருக்காது. ஏதோ கல்யாணத்திற்குப் போவது போலிருக்கும்.

அண்ணன் – எதிர்வீட்டு மாமா தம் சொத்தை அழித்தவர். அவரை அவர் உறவினர்கள் எவரும் சேர்ப்பதில்லை. அவர்கள் வீட்டிற்குப்போனால், சாப்பிடும்வரை உபசாரம் செய்வார்கள். சாப்பாடு முடிந்தவுடன் "வீட்டிற்குப் போய் காரியத்தைக் கவனி. இங்கெல்லாம் வராதே" என்பார்கள். எவரும் அவரைச் சேர்ப்பதில்லை. நம்மை வந்து தொந்தரவு செய்கிறார். இதற்கு அன்னை என்பது சாக்கு.

தம்பி - இவற்றையெல்லாம் பொறுத்துக் கொள்ள முடியாது. இதற்கு மேலே அவருக்கு நல்ல பழக்கம் அதிகம். மனம் நேர்மாறு. கெட்ட எண்ணம், விஷம். அவர்களைச் சேர்ந்தவருக்குத் தெரியும் என்பதால் எங்கேயும் வர அனுமதிப்பதில்லை.

அண்ணன் - ஒரு பிறந்த நாளைக்கு நான் அன்னையைத் தரிசிக்க முடியவில்லை என்பதால் எதிர்வீட்டு மாமா ஊருக்குப் போய்விட்டார். நான் நம் வீட்டிலேயே நாள் முழுவதும் தியானம் செய்தேன். அன்னையின் தங்கமயமான ஜோதியைக் கண்டேன். அன்னையை நேரில் தரிசித்தபொழுது கூட நான் அதைக் கண்டதில்லை. இது மாமா கொடுத்த பரிசு. இதனால் அன்னையைத் தரிசிப்பதைவிட நம் வீடே உயர்ந்தது என்று கூற முடியுமா? இதிலுள்ள உண்மையை நாம் காண முடிகிறதா? கண்டால் பாராட்ட முடியுமா?

தம்பி - உங்களுக்கு ஒரு மாமா தொந்தரவு செய்தார். இந்த மையம் நடத்துபவருக்கு இதேபோல் தொந்தரவு வந்து ஆசிரமமே போகமுடியவில்லை. அவர் துர்அதிர்ஷ்டம், அவரிடம் பலரும் பழக ஆரம்பித்தனர். இவருக்கு முதலில் புரியவில்லை. அன்னையோடு நெருங்கியவர் இவரிடம் பழக ஆரம்பித்ததைப் பேர் அதிர்ஷ்டமாகக் கொண்டார். ஆனால் விஷயம் வேறு மாதிரியாக இருக்கிறது. அவர்களில் பலர் வீட்டிற்குச் சாப்பாட்டிற்கு அழைத்தனர். இவரால் எங்கும் போக முடியவில்லை. எவர் வீட்டிலும் சாப்பிட முடியவில்லை. இவர்களில் யாருக்கும் அன்னை மீது நம்பிக்கையில்லை எனத் தெரிந்து மனவேதனைப் பட்டார். இவர்கள் அன்னையை ஸ்தாபனத் தலைவராகப் பேசுகிறார்களே தவிர, நமக்கெல்லாம் உள்ள நம்பிக்கையுமில்லை. யாருக்குமே அன்னை அனுபவமில்லை. பிரார்த்தனை பலித்தது என்பதே இவர்களுக்கு குறைவு, இல்லை எனலாம். எவர் முகத்திலும் களையில்லை. சிலர் முகம் கோரமாக இருக்கிறது.

அண்ணன் - மைய நிர்வாகி ஏன் இவர்களை நாடுகிறார்? அது அவசியமில்லையே. சமாதிக்குப் போய் வர வேண்டியதுதானே?

தம்பி - அதுதான் இவரால் முடியவில்லை. இவர்கள் தொடர்பை இவர் விட்டாலும், அவர்கள் விடுவதாயில்லை. ஒரு நாள் வீட்டில் தியானம் செய்யும் பொழுது சமாதி தெரிந்தது. சமாதியைச் சுற்றிக் கோர உருவங்கள் வலம் வருகின்றன. இவர் பயந்து போய்விட்டார். இவரைத் தாக்குகின்றன. இவற்றிற்கெல்லாம் என்ன அர்த்தம்? எப்படி நாம் செயல்படுவது என்று தெரியாமல் தவித்தார்.

அண்ணன் - எனக்கும் அந்த அனுபவமுண்டு. மாமா உடன் வரும் பொழுது - அவர் ஒரு நாள் தவறாமல் என்னோடு வருவார் - சமாதிக்குப் போனால் மயக்கம் வருகிறது. அப்படியானால் சமாதி மயக்கம் தருகிறதா? புரியவில்லையே.

தம்பி - எனக்கு இவையெல்லாம் தெரியாதே. அப்புறம் என்ன செய்தீர்கள்?

அண்ணன் - மயக்கம் மாமாவிடமிருந்துதான் வருகிறது என்று எனக்குப் புரிய நாளாயிற்று. புரிந்தபின் மாமா என்னை விட்டுப்போகப் பிரார்த்தனை செய்தேன், போய்விட்டார்.

தம்பி - ஏன் மாமாவிடமிருந்து மயக்கம் வருகிறது?

அண்ணன் - நான் சமாதிக்குப் போவது அவருக்குப் பிடிக்கவில்லை. அந்தக் கெட்ட எண்ணம் எனக்கு மயக்கமாக வருகிறது.

தம்பி - மைய நிர்வாகியால் அது முடியவில்லை. சமாதியை

சுற்றி இவரை எதிர்பார்த்து பலரிருக்கிறார்கள். அவர்கள் தியானத்தில் கருப்பாகத் தெரிகிறார்கள். இந்த ஆராய்ச்சி எல்லாம் நமக்கெதற்கு? என்று அவர் சமாதிக்குப் போவதில்லை.

அண்ணன் - ஸ்தாபனம் வேறு, அன்னை வேறல்லவா? பெரிய லட்சியங்களை நிலைநிறுத்த ஏற்பட்ட ஸ்தாபனங்கள் - மதம், அரசியல் கட்சி - லட்சியத்திற்கு எதிராகப் போவது சரித்திரம்! எல்லா மதஸ்தாபனங்களும் அதுபோல் உலகில் கறுப்பு சக்திகட்கிரையாயின என அன்னை கூறுகிறார். அதுவே இங்கும் நடந்தால், நமக்கு ஸ்தாபனத்தோடு தொடர்பு கொள்ள முடியாது. நமக்கு அன்னை வேண்டும். அன்னையைப் பெற ஆசிரமம் செல்வது சரி. ஏதாவது காரணத்தால் அங்கு போக நமக்குத் தடையாக இருக்கிறது என்றால் அன்னையை வீட்டிலிருந்தே வழிபடுவோம். இந்தக் கறுப்பு சக்திகளுக்கு நாம் பலியாகக் கூடாது.

அன்னை அருளாகும். சுற்றியுள்ள கறுப்பு ஆபத்து, அன்னையை வீட்டிலிருந்தே வழிபடுவோம் என்பதே என் முடிவு.

தம்பி - நமக்கு நேர் எதிரிகளையும், அன்னைக்குத் துரோகம் செய்தவர்களையும், அன்னைமீது நம்பிக்கையில்லாதவரையும், முகம் பேயறைந்தது போலுள்ளவரையும் காண்பது ஆபத்து. எக்காரணத்திற்காகவும் அவர்கள் பார்வையில் படுவது ஆபத்து. தவிர்க்க வேண்டும்.

-தொடரும்.

❉ ❉ ❉





# ரௌடியின் மனம்

இல. சுந்தரி

நாளை 12ஆம் வகுப்புப் பொதுத் தேர்விற்குப் பணம் கட்ட கடைசி நாள். இதுவரை தோழிகளுக்குப் படிப்பில் உதவுவதன் மூலம், புத்தகங்கள் இரவல் பெற்றும், சிறு வகுப்புப் பயிலும் குழந்தைகளுக்கு டியூஷன் எடுப்பதால் சம்பாதித்தும், தன் படிப்புத் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டாள். இந்தத் தேர்வில் நல்ல மதிப்பெண்களுடன் தேறினால் நல்ல எதிர்காலம் உண்டு என்று ஆசிரியைகள் கூறுவர். நல்ல முறையிலே பெற்ற பணத்தைக் கட்டவேண்டும் என்ற ஆவல் இவளுக்கு. பணக்காரத் தோழிகளின் கர்வப்பணத்தைக் கடன் வாங்க விருப்பமில்லை. எதிர் வீட்டுக் கபாலியண்ணனுக்குத் தெரிந்தால் பணம் கொடுத்துவிடும். ஆனால் எந்த வழியிலாவது வரும் பணம் அது. அதைப் பெற்றால் விளைவு நன்றாயிராது. பெற மறுத்தால் அண்ணன் கோபப்படும். எனவே டியூஷன் பணத்தை முன் பணமாகக் கேட்கப் போன இடத்தில் பணம் கிடைக்க 2 நாட்களாகும் என்றனர். எனக்குப் பணம் வேண்டும். ஆனால் அது இரவலாகவோ, தவறான வழியிலோ வந்தது வேண்டாம். நாய் விற்ற பணம் குரைக்காது என்பார்கள். அதை இவள் ஏற்கவில்லை. அதது அதன் குணத்தைக் காட்டும். நல்ல வழியிலே பணம் வேண்டும் என்று எண்ணிக்கொண்டே வந்தாள்.

“நீலா, நானும் உன்னை எத்தனை நாட்களாக எங்கள் வீட்டிற்கு அழைக்கிறேன். எங்கள் வீட்டிற்கு நீ விருந்தாளியாக வரவேண்டாம். தியானமையம் வைத்திருக்கிறோம். அதன் மூலம் எத்தனை அற்புதமான செயல்கள் கேள்விப்படுகிறோம். உயர்ந்த புத்தகங்கள் படிக்கிறோம். நேர்மையாளர்களுக்கு அது மிகவும் பிடிக்கும். நேர்மையற்றவர்களை அது மாற்றும். அதைச் சாக்கிட்டாவது வாயேன்” என்று வலிய அழைத்தாள் கீதா. இதுவே அன்னையின் அழைப்பு என்பது அறியாமலேயே சென்றாள். தியான மையம் என்ற போதே என்ன? ஏது? என்று கேட்க நினைத்தேன். சோம்பேறித்தனத்தால்

கேட்கவில்லை. இப்போது தேவை என்றதும் அறிய ஆசைப்படுகிறேன். தேவையும் அன்னையே. தேவையை நிறைவேற்றுபவரும் அன்னையே. இது நமக்குத் தெரியாதது. பரவாயில்லை நீலா அன்னையை ஏற்றுப் பயனடைந்த நாளாய் மற்றவரும் இதை உணர்ந்து பயன்படவேண்டும் என்றே ஆசை.

'இன்று அந்த ஆசையை நிறைவேற்ற அன்னை தந்த வாய்ப்பு இது. பாண்டிச்சேரியில் ஸ்ரீ அரவிந்தரும், ஸ்ரீ அன்னையும் பூரண யோகம் மேற்கொண்டு அதன் மூலம் சத்திய ஜீவியம் என்ற சக்தியைப் பூமிக்குக் கொண்டு வந்தனராம். அந்தச் சக்தி புவிமீது இயங்கிக்கொண்டும் இருக்கிறதாம். அந்தச் சக்தி வலியது. எதையும் சாதிக்கவல்லது. இதனை பெற்றுத் தந்த ஸ்ரீ அன்னையும் ஸ்ரீ அரவிந்தரும் சூட்சும வடிவில் பாண்டிச்சேரி அரவிந்தாஸ்ரமம் மூலம் நமக்கு வழங்கிக் கொண்டிருப்பினும் நம் போன்றோர் அதனைச் சிறிதும் அறியாதிருக்கிறோம். அதனை அறிந்தவர் தாம் பெற்ற இன்பம் இவ்வையமும் பெறவேண்டுமென தியானமையம் மூலம் ஆஸ்ரமச் சூழலும், ஸ்ரீ அன்னை, ஸ்ரீ அரவிந்தரைச் சூட்சுமமாகக் காணவும் கூடும் என்பதை உணர்ந்து உணர்த்தினார். என் குடிகாரத் தந்தையை மாற்ற என் தாய் இதை மேற்கொண்டாள். இதன் மூலம் என் தந்தை மாறியதோடு பலரையும் மாற்றினார். எங்கள் குடும்பம் பெற்ற அற்புதம் இது. அன்னை சக்தி அளவு கடந்தது. ஏற்பவர் திறன்தான் குறைவு. இவற்றையெல்லாம் சொல்வதைவிடச் சொந்த அனுபவத்தில்தான் நன்கு புரியும்' என்றாள் கீதா. இப்போது எனக்குத் தேவை பரிட்சைக்குக் கட்ட நேரியவழியில் பணம். எனவே அவளுடன் செல்வேன் என்று சென்றாள் நீலா. தியான அறையின் உள்ளே நுழைந்தவுடன் ஏற்பட்ட பரவசம் அப்பப்பா! முதல் பலன் அதுதான். மற்றவை பிறகே.

என்ன கீதா ஒரே மலரலங்காரம். மலர்க் கண்காட்சி போன்றல்லவா உள்ளது? என்றாள் நீலா.

ஆமாம், ஒவ்வொரு மலரும் அன்னையிடம் ஒவ்வொரு திறனைப் பெற்று வெளியிடும் சக்தியுள்ளது. ஒவ்வொரு பூவிற்கும் ஒவ்வொரு பயனுண்டு. தேர்வில் வெற்றிபெற வேண்டிக்கொண்டு இந்த வெற்றி



மலரை அன்னைக்குச் சமர்ப்பணம் செய். பிறகு பார், என்றாள். முதலில் பணம் கட்டிய பிறகல்லவா வெற்றி. எனவே எனக்கு குழந்தை வேண்டும் என வரம் கேட்ட சாவித்திரியைப்போல நானும் தேர்வில் வெற்றி வேண்டும் என வேண்டினேன். உடனே அன்னை வெற்றிக்கு வாய்ப்பை, தேர்வுக்குக் கட்ட பணத்தை ஏற்பாடு செய்துவிட்டார். எப்படி என்கிறீர்களா?

பிரார்த்தனை முடித்து வீட்டிற்குப் போகும் வழியில் மீனாட்சி மாமி (இவரை நவீன சாவித்திரி என்பேன்) தன் கணவர், பிழைக்க வேண்டும் (நோய்வாய்ப்பட்டதால்) என்று எண்ணி ஓர் இளம் பெண்ணிற்கு அவளைச் சக்தியாகக் கருதி வெற்றிலைப் பாக்குப் பழத்துடன் மஞ்சள் குங்குமம் சேர்த்து ஒரு தொகையைக் காணிக்கையாகக் கொடுக்க விரும்பி எடுத்து வைத்துவிட்டு வாசல்பக்கம் வந்தவள் கண்ணில் பட்டேன். வா நீலா உள்ளே வா. இன்று அம்பாள்தான் உன்னை அனுப்பியிருக்கிறார் என்றார். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. உள்ளே சென்றேன். வெற்றிலைப்பாக்குடன் பணம் வைத்துக் கொடுத்து இன்று உன்னை அம்பாளாய் எண்ணி இதைக் கொடுக்கிறேன். இதை நீ ஏற்றால் எனக்கு நல்லது என்றார். கடவுள் அருளைப்பெற்று கடவுள் அருளைத் திருப்பித் தருவது, என்ன விந்தை! நாளை பணம் கட்ட அன்னை வகுத்த வழி மட்டுமன்று என் பிரார்த்தனையை ஏற்றார், என் நம்பிக்கையை உறுதிப்படுத்தினார், என்னை நன்றியால் நிரப்பினார்.

இந்த அற்புத அன்னையை நான் மட்டும் பெற்றால் போதுமா? மற்றவர்க்குத் தரவேண்டாமா? அடுத்த ஞாயிற்றுக்கிழமை சிறப்புக்கூடல். கீதா வீட்டிற்குச் சென்றேன். அன்றைய பேச்சுத் தலைப்பு 'நம்பிக்கை' என்பதாகவிருந்தது. எனக்கு மிகுந்த ஆர்வம் ஏற்பட்டது. என் படிப்பறிவு ஓரளவு அந்தப் பேச்சை புரிந்துகொள்ள, ஏற்றுச் சோதிக்கத் தயாராகவுமிருந்தது. நம்பிக்கையைப்பற்றிக் கூறும்போது, எளிய மூடநம்பிக்கை - இது பாமரர்களுடையது - பெரும்பாலும் பலிக் கக்கூடியது, இரண்டாவது தைரியமாக இருப்பதால் ஏற்படும் நம்பிக்கை - இது இத்தனை நாள் நடந்ததால் இனியும் நடக்கும் என்ற எண்ணத்தால் வரும் நம்பிக்கை - வெளியில் சுற்றப் போகும் பையன்

எப்படியும் வீட்டிற்கு வருவான் என்று அன்றாடம் பார்த்த அனுபவத்தில் நம்பும் நம்பிக்கை. மூன்றாவது தன்னம்பிக்கை, தன் திறமையால் சாதிக்க முடியும் என நம்பும் நம்பிக்கை. நான்காவது தெய்வநம்பிக்கை, தெய்வத்திற்குள்ள சக்தியை ஏற்று நம்புவது. இது தன்னம்பிக்கை போனபின் எழுவது. முடிவான உயர்ந்த புனித நம்பிக்கை. மலையையும் நகர்த்தக்கூடிய பெரிய அதாவது ஆங்கிலத்தில் Faith என்று கேப்பிட்டல் F போட்டு எழுதி இதனைக் கூறுவார் பகவான். இதன் சிறப்பு உங்கள் நம்பிக்கையால் அடுத்தவர் காரியம் (அவருக்கு நம்பிக்கையில்லாத பொழுது) கூடி வருவது, என்றெல்லாம் பேசினார். இதை உடனே என் மனம் சோதித்தது. தேர்விற்குக் கட்ட பணத்தை எப்படியாவது முயன்று பெறுவோம், என்றது தன்னம்பிக்கை. இனி வழியில்லை என்றதும் என்னால் முடியாது என்று அன்னையிடம் வேண்டிய நம்பிக்கை தெய்வநம்பிக்கை. இதற்கு மேலும் மலையை அசைப்பது போன்ற நம்பிக்கையைச் சோதித்துப் பார்த்துவிட மனம் ஆர்வம் கொண்டது.

தியானம் முடிந்து மலர்ப் பிரசாதம் பெற்று வீடு திரும்பினேன். அஞ்சலையம்மா - எதிர்வீட்டுக் கபாலியண்ணன் தாய் வருத்தமாய் அமர்ந்திருந்தாள். என்னம்மா எப்படியோ இருக்கீங்க? என்றேன். எல்லாம் ஒங்கண்ணன் கபாலி கவலைதான். அவன் திருந்துவானா என்றுதான் கவலை என்றாள். கவலைப்படாதீங்க அம்மா. இந்தாங்க இது ஒரு பூ. அன்னைங்ற தெய்வத்தோட பிரசாதம். இதை நம்பி வேண்டுங்க. அண்ணன் மாறிடும் என்றாள். இத்தனை சுலபமா ஒரு வழியிருக்கா. சரி, சரி என்று ஆர்வமாகப் பெற்றுக் கொண்டாள்.

பரட்டைத் தலையும், கடினமான முரட்டு லுங்கியும், முண்டா பனியனும், பெரிய மீசையும், காதுவரை நீண்ட கிருதாவும், நான்தான் இந்தப் பேட்டையின் பெருந்தலைவன் என்று தன்னைக் காட்டிக்கொள்ள கபாலி மேற்கொண்ட கொடுங்கோலம். இவன் தாய் அஞ்சலை, "கபாலி இந்தா டீத் தண்ணி" என்று குவளையை நீட்டினாள்.

"ஆமா பெரிய டீத் தண்ணி. இதக் கொடுத்துட்டு பெரிசா அலுத்துக்குவ. இத நா கடயில குடிக்கமாட்டனா?'' என்றான். உனக்கென்ன? நீ பெரிய வஸ்த்தாது. ஒன்னப் பார்த்ததும் நாயர்



பயந்தடிச்சு டீத் தரும். நீ அப்பால போகங்காட்டியும் இவன் நாசமா போக மாட்டானான்னு சாபங் கொடுக்கும். எம்புள்ளய ஏன் மத்தவங்க பழிக்கணும்? என்றாள். "இப்ப காலைலங்காட்டியும் எதுக்குப் புலம்பற?" என்றான்.

"கபாலி நீயும் நாலெழுத்துப் படிச்சு நல்லவனா வளந்திருந்தா, நாலு காசு நாணயமா சம்பாரிச்சா, ஒனக்கும் ஒரு கல்யாணங்காட்சி செய்யலாமில்லையா" என்று வருந்திக் கூறினாள்.

"இப்ப என்னன்ற? நாலெழுத்தும், நாணயமும் இல்லாமலே சம்பாரிக்க முடியும். நீ பொண்ணப் பாரு. அத வச்சு நா காப்பாத்துறனா இல்லயான்னு நீயே தெரிஞ்சுக்குவ" என்றான் அலட்சியமாக. 'உனக்கு யார்ரா பொண்ணு தருவாங்க?' என்றாள். "ஏன் அதையும் வேணா திருடிக் கொணாந்திடட்டுமா?" என்றான்.

''அறிவில்லாதவன்றது சரியா இருக்கு. பொருளைத் திருடி அனுபவிக்கலாம். பெண்ணோட மனச திருட முடியாதுடா" என்றாள். "நீ மட்டும் படிச்சு கண்ணியமா இருந்தா ஒங்கக்கா மவ மல்லிகா ராசாத்தி கணக்காயிருக்காம். காலேஜி எல்லாம் படிச்சு உத்யோகம் பாக்குதாம். நல்லா சம்பாரிக்குதாம். பொண்ணு கேக்க நமக்கு என்ன கௌரதையிருக்கு" என்று பெருமூச்சு விட்டாள்.

"அட நம்ம அக்காவுக்கு அம்மாம் பெரிய மக இருக்கா. நா அதோட மாமன்ற கௌரதை போறாதா?'' என்றான். ஆமா, அன்னைக்கே பத்துகிளாஸ் படிச்சுப்போட்டு படிச்சவனுக்கு வாக்கப்பட (வாழ்க்கைப்பட) ஒங்க அக்கா ஆசைப்பட்டா. ஒங்குடிகார அப்பனுக்கு அறிவில்ல. தனக்கு வேண்டியவன்னு எவனோ ஒரு தறுதலைய மாப்ளே பேசினாரு. அவ தாங்காம வீட்டைவிட்டு ஓடி படிச்சபுள்ளய கட்டிக்கிட்டு மாலையுங்கழுத்துமா வந்தா. அப்பவாச்சும் பொண்ணு வாழட்டும்னு விட்டிருந்தா நீயும் நல்லா படிச்சு இன்னிக்கு நல்ல நெலமல இருப்ப. என்ன பிரயோசனம், நீ உருப்பட்டா தன்னை யாரு கவனிக்கறதுன்னு சொயநலமா உன்ன ஒங்கப்பன் படிக்கவுடல. படிப்பில்லாம, பொழப்பில்லாம ஒன்ன நிக்க வச்சு போனாரு" என்று ஒரு பாட்டம் சொல்லி முடித்தாள்.

“சரி, சரி. ஒப்பாரி வைக்காத. அவனவன் தலையெழுத்து. நா இப்படி போனதுக்கு வருந்துறயே. ஒம் பொண்ணு கையில சொல்லி அந்த மகளை எனக்குக் கட்டி வைக்க முடியாதா?”

“எப்டிடா முடியும்? அவ மவளை பெரிய படிப்பு படிக்க வச்சு உத்யோகம் பாக்க வச்சுட்டாளாம். இப்படி படிப்பில்லாம, பழக்கமில்லாம ஊரச்சுத்துற ஒனக்கு அவ தம் பொண்ணத் தருவாளா? கடவுள் எழுதின எழுத்தை மாத்த ஏலாது. கர்மத்தை கரைக்கவும் ஏலாது”, என்றாள்.

ஆகா நல்ல வாய்ப்பு. நேத்துதான் தியான மையத்துல அன்னை கர்மத்தையே கரைப்பார் என்று படித்தாள். நம்பிக்கையால மலையையும் நகர்த்தலாம்னு பேச்சு கேட்டிருந்தாள் நீலா. இவர்கள் வெளித் திண்ணையில் உட்கார்ந்து சப்தமிட்டுப் பேசுவதைக் கேட்டு நீலா ஓடி வந்தாள். ‘அஞ்சலயம்மா எதை மாத்தணும், நா மாத்தற வழியைக் காட்டறேன். எதைக் கரைக்கணும், அதுக்கும் வழியிருக்கு’ என்றாள்.

‘வாடியம்மா படிச்ச பொண்ணு, ஒன் அண்ணனுக்கு புத்தி சொல்லு’ என்றாள் அஞ்சலை.

தியான மையம் பற்றி அறிந்த நீலா இந்த அஞ்சலை வீட்டினர் எதிர்வீட்டுப் பெண். அவள் தகப்பன் இரண்டு வருடங்களுக்கு முன்பு விபத்தில் இறந்து போனான். ஆண் துணையின்றி இவளும் இவள் தாயும் தனித்துத் தவித்தபோது கபாலி தன் முரட்டுத்தனங்களை மீறி இவர்களுக்குப் பிணம் எடுக்கவும், காரியங்கள் முடிக்கவும் உதவினான். தவித்து நின்ற நீலாவை அழாத தங்கச்சி என்று தேற்றினான். எல்லோருக்கும் வலிய கல்போன்ற அவன் இவளுக்கு ஈரமுள்ள அண்ணனானான்.

‘‘என்னண்ண அம்மா சொல்லுது?’’ என்றாள். ‘‘ஆமாஞ் சொல்லுது ஒனக்கொரு அண்ணி வரவேணுமின்னு சொல்லுது’’ என்றான் கேலியாக.

“ஏன் வரக்கூடாது? வரத்தான் போகுது என்ன மாதிரியே படிச்ச பொண்ணுதான் எங்கண்ணனை கட்டிக்கப் போவுது நீ கவலய விடண்ணே” என்றாள் கலகலப்பாக.



‘‘ஆமா ஒங்கண்ணன் படிச்ச படிப்புக்கும், சம்பாரிக்கிற பணத்துக்கும் படிச்ச பொண்ணு வரும்’’ என்று ஏக்கத்தை வெளியிட்டாள்.

“ஏன் அஞ்சலயம்மா படிச்ச மாப்ளய படிக்காத பொண்ணு கட்டிக்கிடலயா? அதுபோல படிச்ச பொண்ணை படிக்காத மாப்ள கட்டிக்கிட கூடாதா?” என்றாள்.

‘‘அப்டி சொல்லு தங்கச்சி’’ என்றான் கபாலி. ‘‘அண்ணே நெசமாவே நா ஒனக்கொரு நல்ல வழி சொல்லுவேன், எம் பேச்சைக் கேளு’’ என்றாள்.

அன்று மாலையே தோழி வீட்டு தியான மையத்திற்குச் சென்றாள். தீவிரப் பிரார்த்தனை மேற்கொண்டாள். ‘அன்னையே நேற்று முன் தினம் ஒருவர் பேசினாரே Faith என்ற பெரிய நம்பிக்கை – உயர்ந்த புனித தெய்வ நம்பிக்கை – அதை நம்பி வந்திருக்கேன். கபாலி அண்ணனுக்குப் படிப்பில்ல. தொழிலில்ல. சமூகம் அதுக்குப் படிச்ச பொண்ண, உத்யோகம் பாக்குற பொண்ணை கட்டிக்கிட ஒப்பாது. ஆனால் அது உம்மால் முடியும் என்று நா நம்புறேன். உன்னருளால எல்லார்க் கண்ணிலும் கல்லாத் தெரியற அண்ணனைக் கனியா மாத்திடு அன்னையே’ என்று வேண்டிக்கொண்டு நம்பிக்கையுடன் சென்றாள்.

அஞ்சலையின் கணவன் சரியான குடிகாரன். ஆனால் அவன் மகள் சுமதி நல்லவர்களைப் படிப்பறிவு உயர் பழக்கமுள்ளவர்களைப் பார்த்து தானும் நல்ல முறையில் வாழ ஆசைப்பட்டாள். தந்தையின் கட்டுப்பாடுகளை நயமாக உடைத்தெறிந்து பத்து வகுப்புவரை பிடிவாத மாகப் படித்துவிட்டாள். படிப்பறிவு அவளைப் பண்படுத்தியிருந்தது. தன் தந்தையின் பழக்க வழக்கங்களை, அவனைப் போலவே பொறுப்பற்றுத் திரிந்த அவன் நண்பர்களை அவள் வெறுத்தாள். எங்கே அவள் தன் மகனையும் தனக்கு ஆதரவில்லாது ஆக்கி விடுவாளோ என்றெண்ணி சிறுவனாயிருந்த இவள் தம்பியைத் தனக்கேற்றாற்போல் பயன்படுத்திக் கொண்டான். இவளையும் தன் விருப்பப்படி ஒருவனுக்குக் கட்டி வைக்க முடிவு செய்தபோதுதான் இவள் தன் பண்புகளையும் தன் தந்தையால்

நேர்ந்த அவலங்களையும் நன்கறிந்த ஒரு பண்பாளனைத் தன் விருப்பம்போல் மணந்து கொண்டாள். தன்னிடம் ஆசி பெறவந்த மகளை தன் மானம் இவளால் போய்விட்டது என்று ஆர்ப்பாட்டம் செய்து இவளைத் துரத்திவிட்டு மனைவியையும், மகனையும் தன் விருப்பப்படி ஆட்டுவித்தான் தகப்பன். தன் தம்பியின் எதிர்காலத்தை எண்ணிக் கலங்கியவண்ணம் சுமதி வெளியேறினாள்.

அறியாப்பருவமாதலாலும், தந்தையின் விருப்பப்படி வளர்ந்துவிட்டதாலும் தவறென்று அறியாமல் தவறுகளைச் செய்தான். உழைக்காமல் உண்பதைப் பெரிய பெருமையாகச் செய்தான். எளியவர்களை மிரட்டினான். மற்றவர்களைச் சீண்டி சந்தோஷப்பட்டான். நீலா ஒருத்திக்குத்தான் இவன் மரியாதைக்குரிய அண்ணன். மற்றவர்களின் வெறுப்பைச் சுமந்து வாழ்ந்து கொண்டிருந்தான்.

தன் மகனின் இருண்ட எதிர்காலத்தை எண்ணினாள் அஞ்சலை. சில தினங்களுக்கு முன் தன் மகளையும், பேத்தியையும் ராஜேஸ்வரி பார்த்ததையும், இவள் பேத்தி அறிவும், அழகும், செல்வமுமாய் இருப்பதையும் கூறியதை எண்ணி ஒருபுறம் மகிழ்ச்சியும், தன் வயிற்றில் பிறந்த இன்னொரு ஜீவன் படிப்பும், பழக்கமுமில்லாத குறையை எண்ணித் துயரமுமாகத் தெருத் திண்ணையில் அமர்ந்திருந்தாள். அந்தப் பேட்டையில் பெரிய மளிகைக்கடையின் சொந்தக்காரர் வரதராஜநாயுடு எளிமையாகக் கையில் மாட்டிய குடையுடன் சென்று கொண்டிருந்தவர் 'என்ன அஞ்சலையம்மா வெசனமா குந்தியிருக்கீங்க போலிருக்கு?' என்று விசாரித்தார். (இவர் மனிதாபிமானம் மிக்கவர். கபாலியின் குடிகாரத் தந்தை இறந்தபோது யாரும் உதவ முன்வரவில்லை. அவனால் பாதிக்கப்பட்ட வேதனை அவர்களைத் தடுத்தது. அப்போது நாயுடு கபாலியை ஒரு பொருட்டாக மதித்து உதவி ஆறுதல் கூறினார்.) 'எல்லாம் மவன் கவலைதான் சாமி' என்று எழுந்து நின்று மரியாதையாய்க் கூறினாள். 'கவலைப்படாதே எல்லாம் சரியாகிவிடும். கபாலி வந்தாக் கடப்பக்கம் அனுப்பி வை' என்று கூறிச் சென்றார். பொறுமை, நிதானம், உழைப்பு, எளிமை யாவும் நிறைந்தவர்.



'அண்ணே மாலை 6 மணிக்குப் பாரதி தெருவுல 68ஆம் நம்பர் வீட்டுக்கு வரியா?' என்றாள் நீலா.

'ஏன்? அங்கதான் எனக்குப் பொண்ணு பாத்திருக்கியா?' என்று நையாண்டிச் செய்தான்.

'ஆசையப் பாரு. இனிமதான், அப்ளிகேஷனே போடணும் அப்பறந்தானே அண்ணி கெடைக்கும்' என்றாள்.

"அது சரி. எதுக்குன்னு நீ சொல்லவேயில்லையே" என்றான். அது என் தோழி வீடு. அங்கொரு விசேஷம் நடக்கப்போவுது. நீ அங்க வா. அப்புறம் எல்லாம் புரியும் என்றாள்.

யாருக்கும் எதற்கும் கட்டுப்படாதவன். மனம் போகும் போக்கில் வாழ்பவன். "சரி சரி வரேன் போ" என்றான், பொதுவாக இவன் குணம், நடவடிக்கை நல்ல இடத்திற்குப் பொருந்தாது. எதற்கும் உடன்படாத இவன் அதெல்லாம் நமக்குச் சரிப்படாது. நீ போ தங்கச்சி என்று சுருட்டும் புகையுமாய்த் திரியும் இவன் எப்படி ஒப்புக்கொண்டான்? நீலாவிற்கு அவள் தோழிமூலம் பணம் கட்டும் பிரச்சினை தீர்க்க அன்னை அழைப்பு விடுத்ததை ஏற்றுச் சென்றாள். பிரார்த்தித்தாள். உடனே பிரார்த்தனை பலித்து பணம் கிடைத்தது. நன்றியுணர்வால் மேலும் தியானமையம் சென்றாள். நம்பிக்கையின் மூலம் தாம் செயல்படப்போவதை அன்றைய சிறப்புப் பேச்சின் வாயிலாக அன்னை சூட்சுமமாக அறிவித்தார். நீலாவிற்குச் சூட்சுமம் புரியவில்லையெனினும் அன்னையின் சக்தி மீது அபாரப் பற்று நேர்ந்தது. நம்பிக்கையைக் கபாலியின் நன்மைக்குப் பயன்படுத்த ஆசைப்பட்டாள். உடன் பிறவாதவன், யாருக்கும் பிடிபடாதவன், எல்லோரின் வெறுப்பிற்கும், சாபத்திற்கும் ஆளாகின்றவன், ஆனால் இவளுக்குத் தக்க சமயத்தில் (அப்பாவின் இறப்பில்) கருணை காட்டியவன். எனவே, அவனை நல்லவனாக்கிப் பார்க்கவேண்டும் என்ற ஆவல், நிறைவேற வாய்ப்பில்லாத ஆவல் நிறைவேற அன்னையை நம்பினாள். அன்னை வாய்ப்புகளை உற்பத்திச் செய்வார் என்பதைப் பற்றிக் கொண்டாள். எங்கும் நல்ல இடங்களுக்குச் செல்லாதவன் வரச் சம்மதித்ததே முதல் வெற்றி.

"அண்ணே எங்கனா சுத்திக்கினு நிக்காம கரெக்டா வந்துரு அண்ணே" என்று மீண்டும் வேண்டுதல் விடுத்தாள். "ஆங் கரீட்டா வரேன் போ" என்றான்.

"வரக்குள்ள ரவுடி கணக்கா வாராமெ வெள்ளை வேட்டி, வெள்ளை சட்டை போட்டு சுத்தமா கோயிலுக்கு வராப்பில வாண்ணே" என்றாள்.

"என் வேஷத்தையே மாத்துறியே. சரி, சரி போ உனக்காக இன்னிக்கி மட்டும் வரேன். என்னால எதுனா வம்பு வந்தா நா பொறுப்பல்ல" என்றான். 'ஒண்ணும் வராது. நீ வா' என்று சொல்லிச் சென்றாள். தங்கைக்குக் கொடுத்த வாக்கை காப்பாற்ற வேண்டும் என்ற கபாலியின் நல்லெண்ணத்தை அன்னையின் சக்தி இடமாகக் கொண்டு இயங்கியது.

-தொடரும்.

## அறிவிப்பு

டிசம்பர் 2000 இல் சந்தா முடிவடையும் சந்தாதாரர்கள் உடனடியாக தங்கள் சந்தாவினை புதுப்பிக்க வேண்டுகிறோம்.

## இம்மாதத்தில் வரும் தரிசனநாள்

டிசம்பர் 5 பகவான் மஹாசமாதி அடைந்த நாள்

## அடுத்த மாதத்தில் வரும் தரிசனநாள்

ஜனவரி 1 வருட சுபிட்ச நாள்

**Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 177, Pappammal Koil Street, Pondicherry-12 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.**

**Editor: Karmayogi**

## “கிரீஸ் கூட போடமாட்டோம்”

பரம்பரை விவசாயி, புதியதாக விவசாயம் ஆரம்பித்தவரை வழியில் சந்தித்தார். ‘கையில் என்ன’ என்றார். ‘மோட்டார் பெல்ட்க்கு போடும் கோந்து’ என்று பதில் கூறினார். பரம்பரை விவசாயி பெரிய மிராசுதார். பெல்ட்க்கு கோந்து போடுவது பாக்டரி மோட்டாரில் செய்வது வழக்கம். பெல்ட் சுருங்கி மோட்டார் வேகமாக ஓடும். நிலத்து மோட்டார் கவனிக்கப்படாதது. “நீங்கள் புதிசு. இப்படித்தான் ஆரம்பிப்போம். நாளானால் மோட்டாருக்கு கிரீஸ் கூட போடமாட்டோம்” என்றார் பெரிய விவசாயி.

வயதான அமெரிக்கர் வீட்டிற்கு இந்தியர் ஒருவர் போனார். கணவன், மனைவி இருவர். கணவனுக்கு 82 வயது, மனைவி 1½ வயது மூத்தவர், வேலைக்காரரில்லை. 6,7 ரூம் உள்ள வசதியான சிறு வீடு. “தரை பளிங்கு போலிருக்கிறது. இந்தியாவில் எங்கும் அப்படிப் பார்க்க முடியாது. தூசி, அழுக்கு என்பதை எங்குமே பார்க்க முடியவில்லை. எப்படி இவ்வளவு மெதுவாக நடக்கும் இவர்கள் இவ்வளவு தூய்மையாக வீட்டை வைத்துக் கொள்கிறார்கள் என ஆச்சரியமாக இருந்தது” என்றார். அவரை அந்த ஆண்டு அன்பர்கள் 4,5 முறை சந்தித்தனர். அவரிடம் $600,000 பெறுமான Proctor & Gamble Shares இருந்தன. 1 வருட முடிவில் அவை $1 மில்லியனானதாக சந்தோஷமாகக் கூறினார். அவருக்கு தெய்வபக்தி குறிப்பாக இல்லை. அன்னையைப்பற்றி கேள்விப்பட்டதுண்டு.

* அன்பர் வருகை அருளைக் கொண்டு வந்து, தூய்மை இருப்பதால் பெரிய அதிர்ஷ்டத்தைக் கொடுத்ததை அந்த அமெரிக்கரோ, அவரைச் சந்திக்கும் அன்பர்களோ அறியவில்லை.
* ‘கிரீஸ் கூட போடமாட்டோம்’ என்ற பெருமையை விட்டு எப்பொருளையும் சுத்தமாக, பளிங்குபோல் வைத்திருப்போம் என்ற அன்பர்கள் வாழ்வில் அன்னையும், அருளும் தவறாது அதிர்ஷ்டமாகச் செயல்படும்.

## இன்டர்நெட் தரிசனம்

“அன்னையை நேரில் தரிசித்தவர்கள் என்ன பேறு பெற்றிருக்க வேண்டும்? கண்களில் என்ன கருணை. எப்படி பக்தர்களை குனிந்து கவனிக்கிறார்கள். உடலெல்லாம் சிலிர்க்கிறது. நெஞ்சு பூரிக்கிறது. இந்த கேஸட் கிடைக்க என்ன பாக்கியம் செய்திருப்பேன் நான். அன்னையின் டிரஸ் காற்றில் அலைவது என்ன அழகு. எனக்கு எப்படிச் சொல்வது எனத் தெரியவில்லை. அப்பப்பா, ஆயிரம் கோடி நன்றி தெரிவிக்கவேண்டும். யாருக்கு எனத் தெரியவில்லை” என்று இன்டர்நெட்டில் அன்னையைத் தரிசித்த பக்தர் நெஞ்சுருகினார். இந்த அனுபவம் நெஞ்சு விழிப்பானவர்க்கேயுண்டு. அன்னையை அன்று காணாதவர் இன்டர்நெட்டில், கேசட்டில் இன்று காணும்பொழுது எல்லோர்க்கும் இந்த அனுபவம் இருப்பதில்லை. அன்பர்கள் அன்றும், இன்றும் பெற்ற சில அனுபவங்கள்.

1) ஜீவன் இரண்டாகப் பிளந்து அன்னையை உள்ளே அனுமதித்த அன்பர் பல நாள் பேச்சிழந்து, செயலிழந்து, அசைவிழந்து, அன்னையோடு ஐக்கியமான உணர்வு பெற்றார்.
2) அன்னையின் அகவுருவங்களைச் சூட்சுமபார்வையால் கண்டவர் பலர்.
3) சற்றுத் தூரத்திலிருக்கும்பொழுது ‘ஷாக்’ அடிப்பது போலிருந்ததால் ஓடி வந்தார் ஒருவர்.
4) எதையும் உணராது அன்னையின் டிரஸ்ஸை விமர்சனம் செய்தவர் ஒரு பக்தர்.
5) அன்னை முன் தரையில் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தவர் எழுந்திருக்க விருப்பமில்லாமலிருந்தார்.
6) அன்னைக்கு நமஸ்காரம் செய்ய பிரியமில்லாமல் திரும்ப வருபவர்கள் சிலர்.
7) நமஸ்காரம் செய்யாமல் தலை வணங்குபவர்கள் பலர்.
8) தரிசனம் செய்தபின் இனி அன்னையே எல்லாம் என ஊருக்கும் போக மறுத்து இங்கேயே தங்கியவர் பல பேர்.
9) ஒரு மகானைத் தரிசனம் செய்வதுபோல் செய்தவர்களும் உண்டு.
10) தரிசித்த நாள் முதலாய் தினமும் தியானத்தில் அக்காட்சியை இன்று வரை பெற்றவர் ஒருவர்.
11) ஒருவர் உடல் ‘கரைந்து’ ஒளிமயமாயிற்று.